
கீதாசார்யன்

காளயுக்தி ௵ தை ௴

4





ஸ்ரீமத்பரமஹம்ஸ திருமலை திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமி கீதாசார்யன் ஆயுள் சந்தாவாக ரூ. 100 வழங்கியுள்ளார். அவருக்கு எமது உளம்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்.

கீதாசார்யன்



ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்.

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்.

7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி : சென்னை–600005.

ஆண்டுச் சந்தா ரூ 8/]

[விலை காசு 75

பொருளடக்கம்


மேலட்டையில்.........

காஞ்சிபுரம் வரதராஜன்

Colour Photo by M. N. Krishnaswamy, Triplicane.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | காளயுக்தி௵ | தை-மீ | ஜனவரி 78 | பகுதி 4

இயற்கைக் காட்சிகளிலும் ஆழ்வார்களுக்கு அற்புதமான கற்பனைகள் தோன்றுகின்றன. அதனுடைய பின்னணியை வர்ணிப்பதற்கு பட்டர் போன்ற ஆசார்யர்களே சாமர்த்ய முள்ளவர்கள்.

திருநறையூர் என்று ஒரு திவ்யதேசம். அங்கு நாச்சியாருக்கே முக்யத்வம் அதிகம். இன்றைக்கும் அங்கு நாச்சியாருக்கு மாடவீதிப் புறப்பாடுகளும் உண்டு. பெருமாளுடன் கூட எழுந்தருளும்போதும் நாச்சியார் முன்னே எழுந்தருள பின்னே பெருமாள் எழுந்தருள்வது வழக்கம். எனவே அந்த திவ்யதேசத்தை நாச்சியார் கோயில் என்றே வழங்குவர். பெண்ணரசு நாடு என்றுகூட வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

இத்தகைய திவ்யதேசத்தை மங்களாசாஸனம் செய்வதற்கு எழுந்தருளினர் திருமங்கை ஆழ்வார். அங்கு வயலில் ஒரு குவிந்த ஆம்பல் மலரின்மேல் வண்டு ஒன்று அமர்ந்திருப்பதைக் கண்டார். அதன் காரணத்தை கற்பனையில் அறிந்தார். பள்ளி கமலத்திடைப்பட்ட பகுவாயலவன் முகம் நோக்கி நள்ளியூடும் வயல் சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே என்றார். அதாவது தாமரைப் பூவிலே படுத்துக்கொண்டிருந்த ஆண் நண்டின் (அலவன்) முகத்தைப் பார்த்து பெண் நண்டு (நள்ளி) ஊடல் செய்யப்பெற்ற வயல் சூழ்ந்த நறையூர் என்று பொருள். இதன் விளக்கத்தை பட்டர் சுவையாக ஒரு கதையாக விவரித்தார்.

ஒரு ஆம்பல் மலரிலே வாழ்ந்துகொண்டிருந்தன ஒரு அலவனும் நள்ளியும். பெண் நண்டானது கர்பமுற்றவாறே அதற்கு இனிய பதார்த்தங்களைக் கொண்டுவந்து கொடுப்போம் என்று கருதிய ஆண் நண்டு ஒருநாள் மாலை ஆம்பல் மலரிலிருந்து புறம்பட்டு ஒரு தாமரை மலரை அடைந்தது. அப்போது சூரியன் அஸ்தமித்துவிட தாமரை மலரானது மூடிக் கொண்டது. அத்தாமரை மலரை மலர்த்திக்கொண்டு வெளியே வந்துவிட வேண்டும் என்று நண்டானது எவ்வளவோ குதித்தும் புரண்டும் பார்த்தது; முடியவில்லை விடிந்தவாறே தாமரை மலர, வண்டும் வெளிக்கிளப்பித் தன்னுடைய ஆம்பல் மலரை அடைந்தது. ஆனால் சூரியன் உதித்த உடன் ஆம்பல் மலர் மூடிக் கொள்ளுமே! எனவே இவ்வண்டு ஆம்பலை அடைவதற்கும் ஆம்பல் மூடிக் கொள்வதற்கும் சரியாக இருக்க அது உள்ளே இருக்கும் பெண் நண்டின் கோபத்தை வெளிப்படுத்துவதுபோல் இருந்தது. அதாவது இரவில் வெளியே தங்கியதாலும், உடல் முழுவதும் மகரந்தத் தூள் படிந்திருக்க, மதுவை உண்டு கண்கள் சிவந்திருந்தபடியாலும் ஊடல்கொண்ட பெண் நண்டு கதவைச் சாத்தியது போல் இருந்ததாம். இரவு முழுவதும் ஆம்பல் மலர் மலர்ந்

திருந்தது ஆண் நண்டின் வரவுக்காக பெண் நண்டு கதவைத் திறந்து வைத்துக்கொண்டு காத்திருப்பது போலவும் ஆண் நண்டு வந்ததும் ஆம்பல் மலர் மூடிக்கொண்டது கோபம் கொண்ட பெண் நண்டு கதவைச் சாத்தியது போலவும் இருந்தது.

இப்படி சுவையாக விவரித்தார் பட்டர். இதைக் கேட்ட பிள்ளை திருநறையூரரையர் என்பவர் "ஆண் நண்டு வருவதற்கும் ஆம்பல் மலர் மூடிக்கொள்வதற்கும் சரியாகவன்றோ இருந்தது. ஆண் நண்டை தீரவிசாரியாமல்—அதாவது இரவில் வெளித்தங்க நேர்ந்ததன் காரணத்தை அறியாமல்—பெண் நண்டு தண்டித்தது சரியோ?" என்று கேட்டாராம். உடனே பட்டர் "என்ன செய்வது? திருநறையூரில் நாச்சியாருக்குத்தானே பிராதான்யம்! கேட்பார் இல்லாத பெண்ணரசு நாடாயிற்றே! எனவே தண்டனை விசாரணையில்லாமலே அளிக்கப்பட்டுவிட்டது" என்றாராம்.

ஆழ்வாரின் உள்ளக்கருத்தை அறிவதற்கு ஆசாரியர்களே சாமர்த்தியம் உள்ளவர்கள் என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாகும். அவற்றை அனைவரும் புரிந்துகொள்ளும்படி எளிய நடையில் விளக்குவதே ஸ்ரீதோசார்யன் பணியாகும்.

பெருமாள் கோயிலைபற்றி...

அரவரசன்

★ இத்தலம் செங்கல்பட்டு ஜில்லாவில் சென்னைக்குத் தென்மேற்கே 50 மைல் தொலைவில் செங்கல்பட்டு அரக்கோணம் ரயில் மார்க்கத்தினிடையில் காஞ்சிபுரம் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல் தொலைவிலுள்ள திருக்கச்சி அத்திகிரி ஆகும்.

★ ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்கள் 108ல் கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்றபடி மூன்றாவது ஸ்தானத்தை வகிக்கும் இத்தலம் தொண்டைநாட்டு திவ்யதேசங்களுள் தலையானதாகும்.

★ இங்குள்ள வரதராஜன்கோயில் 9ஆம் நூற்றாண்டுக்கு முன்பு பல்லவர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது சரித்திரவாசிரியர்கள் கருத்து.

★ சோழர்களாலும் பல்லவர்களாலும் பல திருப்பணிகள் செய்யப்பட்ட தலமிது. திருமலை நாயக்கர் போன்ற அரசர்கள் பல விலைமதிப்பற்ற ஆபரணங்களை அளித்துள்ளனர். குறிப்பாக ராபர்ட் கிளைவ் அளித்துள்ள மகரகண்டி இன்றைக்கும் புகழ் பெற்றது.

★ பெருமாளுடைய ஸன்னதி மலைமேல் உள்ளது. அதைச் சுற்றியுள்ள பிராகாரம் (பிரதக்ஷிணம்) வையமாளிகை எனப்படுகிறது. அடுத்த பிரகாரம் திருமலைப்ரதக்ஷிணம் அல்லது சேனையர்கோன் திருமுற்றம் எனப்படுகிறது. மூன்றாவது ப்ராகாரம் ஆளவந்தார் பிரதக்ஷிணம் எனவும் நான்காவது ப்ராகாரம் ஆழ்வார் திருவீதி எனவும் வழங்கப்படுகிறது. ஐந்தாவது பராகாரம் மாடவீதியாகும்.

★ இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் வரதன் வரதராஜன், தேவப்பெருமாள், பேரருளாளன், அத்தியூரான்,

அருளாளப்பெருமாள் என்ற பல பெயர்களால் போற்றப்படு கிருர்.

★ கிருதயுகத்தில் திருமாலைக்காணவேண்டி நான்முகன் சத்தியவிரதக்ஷேத்திரத்தில் அசுவமேதயாகம் செய்தபோது அக்னிகுண்டத்திலிருந்து தோன்றிக் காட்சியளித்த எம்பெரு மான் அவன் விருப்பப்படி அங்கேயே கோயில் கொண்டான். அவ்வாறு அக்னியிலிருந்து எழுந்ததன் அடையாளத்தை இன்றும் தேவப்பெருமாள் திருமுகத்தில் காணலாம். அக்னி யிலிருந்து எம்பெருமான் தோன்றிய நாளான சித்திரை ஹஸ்தநட்சத்திரத்தன்று இன்றும் திரு அவதார மஹோத் ஸவம் நடக்கிறது.

★ திரேதாயுகத்தில் கஜேந்திராழ்வாஞல் இப்பெருமான் ஆராதிக்கப்பட்டதால் அவனுறையுமிடம் ஹஸ்திகிரி (ஹஸ்தி- யானை: கிரி-மலை) எனப்படுகிறது. துவாபரயுகத்தில் பிருஹஸ் பதியாலாராதிக்கப்பட்டதாகவும் கலியுகத்தில் ஆதிசேஷஞல் ஆராதிக்கப்படுவதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

★ பூதத்தாழ்வார் "உலகேத்துமாழியான் அத்தியூரான்" என்றும் "அத்தியூரான் புள்ளையூர்வான்" என்றும் இவ்வெம் பெருமானை மங்காளாசாஸனம் செய்துள்ளார். மேலும் திருவிருத்தத்தில் நம்மாழ்வார்" "இமையோர் தலைவா', என்ப தும் திருவாய்மொழி முதல் பாசுரத்தில் "அயர்வறுமமரர் களபதி துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே" என்பதும் இவரைக் குறித்தே என்றும் பெரியோர் பணிப்பர். இதற்குச் சான்ருக வேறு எங்குமில்லாமல் காஞ்சியில் மட்டும் நம்மாழ் வார் தம் நெஞ்சில் கைவைத்துக்கொண்டு எழுந்தருளியிருப் பதைக் காணலாம்.

★ மேலும் தேவப்பெருமாள் கருடவாகனத்தில் எழுந்தரு ளும்போதெல்லாம் (வைகாசி கருடன், ஆனி கருடன், ஆடி கருடன்) ஆழ்வார் பிரதட்சிணம் வழியாக எழுந்தருளி நம்

மாழ்வார் ஸன்னதி எழுந்தருளி பகுமானம் ஸாதித்து "அருள் ஆழிப்புட்கடவீர் அவர் வீதி ஒரு நாளென்று அருள்" என்ற ஆழ்வார் வேண்டுகோளை நிறைவேற்றுகிறுன்.

★ திருமங்கையாழ்வார் திருமாலடியார்கள் ததியாராதனத்திற்கு பொன்னையும் பொருளையும் செலவிட்டுவிட்டு பேரரசனுக்குக் கப்பம்கட்ட முடியாமல் சிறைப்பட, தேவப் பெருமாள் இவர் கனவில் தோன்றி வேகவதியாற்றங்கரையில் புதையலிருப்பதாகக் காட்டி திருமங்கையாழ்வாரை சிறையிலிருந்து விடுவித்தார்.

★ ஸ்ரீராமாநுஜரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஆளவந்தார் ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சிக்கு எழுந்தருளி யாதவப்ரகாசருடைய கோஷ்டியிலிருந்த ராமாநுரைக்குளிர நோக்கி "ஆம் முதல்வனிவன்" என்று அருளிச் செய்தார். அவ்வாறு ஆளவந்தார் கடாக்ஷித்த இடம் இன்றும் "ஆளவந்தார் பிரதக்ஷிணம்" என்றே வழங்கப்படுகிறது.

★ அல்லும் பகலும் ஆலவட்ட (விசிறி) கைங்கர்யம் செய்து வந்த திருக்கச்சி நம்பிகளுடன் அர்ச்சாவதார நிலையையும் கடந்து அளவளாவி "அஹமேவ பரம்தத்வம்" (நானே பரம்பொருள்) முதலிய ஆறு வார்த்தைகளை (எம்பெருமாணுருக்காக) அருளிச் செய்தகச்சிவாய்த்தான் மண்டபத்தை இன்றும் மலைமேல் காணலாம்.

★ யாதவப்ரகாசருடன் காசியாத்திரை புறப்பட்ட ஸ்ரீராமாநுஜர் தனக்கு ஏதோ தீங்கு நேரப் போகிறது என்றறிந்து இடையில் பிரிந்து வழி தெரியாமல் விந்தியமலைக்காட்டில் தவித்துக்கொண்டிருந்தபோது பேரருளாளன் ஒரு வேடுவனும் பெருந்தேவி ஒரு வேடுவச்சியுமாக வந்து ஒரே இரவில் கச்சிப் பதிக்கு கொண்டுவந்து சேர்த்து அருகில் ஒரு சாலைக் கிணற்றையும் காட்டி அதிலிருந்து தீர்த்தம் எடுத்து வருமாறு கூறி விட்டு மறைந்துவிட்டனர். அவன் பேரருளாளனே என்றறிந்த இராமாநுசர் ஸ்ரீரங்கம் எழுந்தருளும்வரை அக்கிணற்றிலிருந்து தீர்த்தம் எடுத்துவந்து தேவப்பெருமாளுக்கு ஸமர்ப்

பித்து வந்தார். இன்றும் அது தொடர்கிறது. அதேபோல் இன்றும் தேவப்பெருமாள் ராமாநுஜரை மீட்ட நாள் அநுஷ்டானகுள உத்ஸவமாக அநுஷ்டிக்கப்படுகிறது.

★ காஞ்சியில் தேவப்பெருமாள் ஸன்னதியிலேயே துறவறம் பூண்டு கைங்கர்யம் செய்துவந்த ஸ்ரீராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கு அனுப்புமாறு ஸ்ரீரங்கநாதன் அரையரை அனுப்பி வேண்ட வரதனும் மனமில்லாமலே ஸ்ரீராமாநுஜரை அனுப்பினன் இத் தியாகத்தினுல் பெருமாள் கோயில் தியாகமண்டபம் எனப்படுகிறது.

★ எம்பெருமானுருக்காக சோழவரசனிடத்தில் கண்ணை யிழந்த கூரத்தாழ்வான் அவர் நியமனப்படியே வரதராஜ ஸ்தவம் அருளிச் செய்து தம் கண்ணின் பலனைப் பெற்றது இத்தலத்திலேயே

★ வேதாந்ததேசிகர் வரதராஜ பஞ்சாசத் என்ற தோத்திரத்தாலும் மணவாள மாமுனிகள் தேவராஜமங்களம் என்ற தோத்திரத்தாலும் தேவராஜனைப் போற்றியுள்ளனர்.

★ கி.பி. 1443ல் பரமபதித்த மணவாள மாமுனிகள் திருநக்ஷத்திரமான ஐப்பசித் திருமூல மஹோத்ஸவத்தைப் பற்றி இக்கோயிலிலுள்ள 1555-ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று தெரிவிப்பதால் அதற்கு முன்பே இக்கோயிலில் மணவாள மாமுனிகள் ஸன்னதி ஏற்பட்டிருந்தது சரித்திர பூர்வமான உண்மை ஆகும். வேறு எந்த ஆசாரியக்ருகும் இவ்வளவு குறுகிய காலததில் ஸன்னதி ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத தக்கது.

★ அப்பய்ய தீக்ஷிதரும் ஒரு வரதராஜஸ்தவம் இயற்றியுள்ளார். இவை தவிர புரந்தரதாஸர் (கண்ணூர கண்டெனு), தியாகராஜசுவாமிகள் (வரதராஜ நின்னு கோரி), முத்துஸ்வாமி தீக்ஷிதர் (வரதராஜமுபாஸ்மஹே) ஆகியோருமு தத்தம் பாமாலைகளைச் சூட்டியுள்ளனர்.

★ ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாராயணஜீயரையும் திருப்பதியில் கோயில் கேள்வி (சின்ன) ஜீயரையும் நியமித்திருந்தது போல மணவாள மாமுனிகள் இங்கு அழகிய மணவாள ஜீயரை நியமித்திருந்தார்.

★ முஸ்லிம்களின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதற்காக கிபி 1688ல் திருச்சி உடையார் பாளையத்தில் மறைத்துவைக்கப்பட்ட தேவபெருமாளை கிபி 1710ல் ஆத்தானஜீயர் தம் சீடரான ராஜாதோடர் மாலின் உதவியுடன் மீண்டும் காஞ்சியில் எழுந்தருளப் பண்ணினார். இதற்குக் கைமாருக ஸ்தலத்தார் கோயிலின் நிர்வாகங்களனைத்தையும் ஆத்தான்ஜீயரிடம் ஒப்படைத்தனர். இதற்கான கல்வெட்டு ஒன்றை தாயார் ஸன்னதி முகப்பிலும் ராஜாதோடர்மாலின் சிலைகளையும் இன்றும் காணலாம். தேவப்பெருமாளை மீட்டதினமான பங்குனி உத்தரட்டாதியன்று இன்றும் உடையார்பாளைய உத்ஸவம் நடைபெறுகிறது.

★ சித்திரையில் சித்திராபௌர்ணமி உத்ஸவம் தை மாதத்தில் சீவரம்பார்வேட்டை, வனபோஜனம், அநுஷ்டான குளஉத்ஸவம், மாசியில் தென்னேரி ராஜகுள தெப்போத்ஸவங்கள் ஆகிய உத்ஸவங்களுக்கு பெருமாள் வெளியூர்களுக்கு எழுந்தருள்கிறார்.

★ ஸ்ரீவைஷ்ணவர் திரளால் பொலிவு பெற்றுவரும் இத்திவ்விய தேசமும், "தொண்டைமண்டல வேதியர் வாழவே, தூய தென்மறை வல்லவர் வாழவே" என்ற வாக்கின்படி அருளிச் செயல் ஒலியும், அருமறையினொலியும், அடியார் குழாமும் நேரில் சேவித்தே அநுபவிக்கத்தக்கவை. நம் ஸம்ப்ரதாயத்தின் திலகமான ஸ்ரீஉவே மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி நித்திய வாசம் செய்துகொண்டு ஒழிவில் காலமெல்லாம் அருளிச் செயல் கோஷ்டியை அலங்கரிக்கும் பெருமை காஞ்சிக்கே உரியதனிச் சிறப்பாகும். பொலிக! பொலிக! பொலிக!

பெருமாள் கோயில்.

(காஞ்சீபுரம்)

வித்வான், நியாய சிரோமணி, சொல்வேந்தர், பிள்ளைலோகம்,
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

திருக்கச்சி மாநகர் :— பெரியோர்கள் காஞ்சீபுரத்தைப் பெருமாள் கோவில் என்றே கூறுவார்கள். பெருமாள் என்ற சொல் ஸ்ரீதேவப் பெருமாளையே (வரதராஜப் பெருமாளையே) குறிக்கும். ஆதலால், அவன் எழுந்தருளி இருக்கும் காஞ்சி மாநகரையும் பெருமாள் கோயில் என்று கூறுவது வழக்கம். பல மொழிகளில் இலக்கியங்கள் தோன்றி வளர்ந்த நகர் காஞ்சீபுரம். கலைகளின் பிறப்பிடம்; சமயங்கள் வளர்ந்த இடம்; பக்தி நெறியில் பொலிவு பெற்று விளங்குமிடம்; வரலாற்றில் சிறப்பிடம் பெற்று வானளாவிய பெரும் புகழுடன் விளங்கும் இடம்; ஸ்ரீ தேவப்பெருமாளின் அருள்மாரியால் ஸ்ரீ வைஷ்ணவம் தழைத் தோங்கி வாழுமிடம்; அடியார்களின் உள்ளத்தில் ஆழப்பதிந்த இடம்; அருளிச் செயலில் அழுந்தி அருளாளன் திளைக்கும் இடம்; பழந்தமிழர்களின் பண்பாட்டை வெளிப்படுத்திக் கொண்டு தனிச் சிறப்போடு விளங்குமிடம்; பேரருளாளன் பெரு மகிழ்வோடு வாழுமிடம் காஞ்சீபுரம்!

மாநகரத் திருவுருவம் :— 'காஞ்சீபுரம் மயில் வடிவத்தில் அமைந்துள்ள அழகிய நகரம். அதற்குக் கச்சி, கச்சிப்பேடு என்று பெயர்களுண்டு அந் நகரத்தின் முகப்பாக இருப்பது அத்தியூர்' என்று வரலாறு கூறுகிறது. இந் நாளில் காஞ்சீபுரம் சின்ன காஞ்சீபுரம், பெரிய காஞ்சீபுரம் என்று பிரித்து வழங்கப் படுகிறது. சின்ன காஞ்சீபுரத்தை விஷ்ணு காஞ்சீ என்றும் கூறுகிறார்கள். இவ்விடத்தில் தான் 'அத்திகிரி மலை உள்ளது. மலையின்மேல் ஸ்ரீவரதராஜர் எழுந்தருளி இருக்கிறார். அத்திகிரி (இந்நாளில்) சிறிய குன்றாக இருப்பதால்

அதையும் சேர்த்துப் பெருங் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ வரதராஜரை வணங்க மலை மீது ஏறிச் செல்ல வேண்டும். சிங்கம் மலைக் குகையில் வாழும். அக் கோயிலுள்ள நரஸிம்மப் பெருமாளும் அத்திகிரி மலைக்குகையில்தான் எழுந்தருளி இருக்கிறார். அத்திகிரியைக் கொண்ட பகுதியே அத்தியூர். அதுவே சின்ன காஞ்சீபுரம். சோழர்களும், பல்லவர்களும், கல்வி வாணிகம் முதலிய பல துறைகளில் சிறந்து விளங்கிய இந் நகரைத் தலை நகராகக் கொண்டிருந்தனர் என்று அறியப் படுகிறது.

பெருவீடு அளிக்கும் பெருநகரம் :— சில நகரங்களில் வசித்தால் மோக்ஷம்; சில நகரங்களை நினைத்தால் மோக்ஷம்; சில நகரங்களின் பெயரைச் சொன்னால் மோக்ஷம். நினைத்தாலும், சொன்னாலும், வசித்தாலும் மோக்ஷம் தரும் நகரங்கள் 'ஏழு' என்று பெரியோர்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ அவந்திகாபுரீ
த்வாரவதீ சைவ ஸப்தைதே மோக்ஷ தாய கா: ॥

என்று ஏழு நகரங்களையும் பெருமை படுத்திக் கூறும் சுலோகம் ஒன்று வெகு நாட்களாக வழங்கப்பட்டு வருகிறது. முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி என்ற ஆன்றோர் வாக்கால் காஞ்சீபுரம் மோட்சம் தரும் புண்ணிய மாநகரம் என்று அறியப்படுகிறது! மோக்ஷமளிக்கும் பராத்பரனை ஸ்ரீ தேவப் பெருமாளைத் தன்னிடத்துக் கொண்டிருப்பதனாலேயே காஞ்சீ புரத்திற்கும் 'மோட்சமளிக்கும் தன்மை' ஏற்பட்டுள்ளது என்றால் மிகையாகா.

பிரம்மாராதனம் :— ஒரு சமயம் பிரம்மா மனம் கலங்கி இருந்தார். அப்போது வானத்தில் ஒரு குரல்! 'பிரம்ம தேவனே! கங்கைக்குத் தெற்கே இருநூறு யோஜனை தொலைவிலும், கிழக்குக் கடலுக்கு மேற்கே ஐந்து யோஜனை தொலைவிலும், வேகவதியின் வடக்குக் கரையில் அத்தியூர் உள்ளது.

அங்கு நீர் யாகம் செய்ய வேண்டும். ஆயிரம் அசுவமேத யாகம் செய்ய வேண்டும்! பயப்பட வேண்டாம்! நீர் அங்கு ஒரு அசுவமேத யாகம் செய்தாலும் ஆயிரம் யாகங்களின் பலன் கிடைக்கும். என்று கூறியது! பிரமனும் மிகவும் பக்தி யோடு யாகம் செய்தான். உத்தரவேதியில் அக்னியிலிருந்து பகவான் புண்ய கோடி விமானத்துடன் தோன்றினன். இது கிருத யுகத்தில் நடந்த நிகழ்ச்சி! பிரம்மா தேவாதி தேவனை அந்த எம் பெருமானை அத்திகிரியின் மேல் பிரதிஷ்டை செய்து முக்காலமும் ஆராதித்து வந்தார். என்கிறது சேஷ தர்மம். அதனுல் இப்போதும் ஆண்டுக்கு ஒரு நாள் சித்திரா பௌர்ணமி யன்று பிரம்மாராதனம் நடைபெறுவதாக அறிவில் சிறந்த பெரியோர்கள் கூறி வருகின்றனர்.

ஆழ்வார்கள் பாடிய அருளாளன் :— ஸ்ரீ வரதராஜன், வரதன், தேவாதி தேவன், தேவப் பெருமாள், அருளாளன், அத்திகிரிநாதன், வரந்தரு மாமணி வண்ணன். பேரருளாளன் என்று பல திரு நாமங்களால் தேவப் பெருமாளைக் குறிப்பிடு வது வழக்கம்

நம்மாழ்வார் தன்னுடைய பிரதம (முதற்) பிரபந்தத்தில் 'இமையோர் தலைவா!' என்று தேவப் பெருமாளை அழைத்து 'கேட்டருளாய்! அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதனுலேயே தேவப் பெரு மாள் இன்றும் அருளிச் செயலைக் கேட்டு ஆனந்தப் படுகிருர். 'அருளிச் செயலை தேவப் பெருமாள் ரக்ஷித்து வருகிருர்; அருளிச் செயல் தேவப் பெருமாளை ரக்ஷித்து வருகிறது' என்று பலர் கூறுவதும் பொருத்தமேயாம்.

ஆழ்வார் தாம் அருளிய சரமப்பிரபந்தமான திருவாய் மொழியில் 'உயர்வற உயர்நலம்' என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களையும் தேவப் பெருமாளுக்கே வழங்கியுள்ளார் 'அயர்வறுமமரர்களதிபதி!' என்று தேவப் பெருமாளையே குறிப்பிடுகிருர். அப் பதிகத்தின் முடிவில் 'பரனடிமேல் குரு

கூர்ச் சடகோபன் சொன்ன' என்று 'பரன்' என்ற சொல்லால் தேவப்பெருமாளையே கூறியுள்ளார்! 'அஹமேவபரம் தத்வம்' என்று சொன்ன வரன்றோ தேவப்பெருமாள்! அவர் சொன்ன வார்த்தையைக் கொண்டே ஆழ்வாரும் பரன் என்றே குறிப்பிட்டார்.

தம் மனத்தை நோக்கி 'அமரர் களதிபதி துயரறு சுடரடி தொழுதெழு' என்று உபதேசிக்கும் முறையில் நம்மாழ்வார் எழுந்தருளி இருப்பதையும், மதுரகவிகள் நாதமுனிகளோடு கூடி இருந்து மகிழ்வதையும் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ தேவப்பெரு மாள் ஸன்னிதியில் ஸேவிக்கலாம் பூதத்தாழ்வார், 'அத்தி யூரான்...இறையாவான் எங்கள் பிரான்' என்றார். அத்தி யூருக்குத் தலைவன் ஸ்ரீ தேவப் பெருமாளே! கலியன் 'கச்சிமேய களிறு' என்று மங்களா சாஸனம் செய்கிறார். பல ஆழ்வார் கள் 'பேரருளாளன்' என்று பலமுறை கூறித் தேவப் பெரு மாளை உணர்த்துகிறார்கள். ஆழ்வார்கள் பாடிய அருளாளனே நம் பேரருளாளன்!

கனவு பலித்ததம்மா : — திரிஜடை கண்ட கனவு பலித் தது; ஆண்டாள் கண்ட கனவு பலித்தது! ஸ்ரீ ராமாநுஜர் கண்ட கனவும் பலித்தது! யக்ஞ மூர்த்தி என்பவர் மாபெரும் புலவர்; மாயாவாதி! ஸ்ரீரங்கத்தில் ராமாநுஜரை சொற்போர் நடக்த அழைத்தார். பதினேழு நாட்கள் யக்ஞ மூர்த்தி தன் அறிவுத்திறனாலும், சொல்வன்மையாலும் வினாக்களை அடுக்கிக் கொண்டே இருந்தார். இந்த முறைகளைப் பின்பற்றியே தன் சமயத்தை நிலை நாட்ட முயன்றார்.

ஸ்ரீராமாநுஜர் திருவாராதனம் செய்யும் பெருமாள் தேவப் பெருமாள். தன் மடத்தில் எழுந்தருளி இருக்கும் தேவப் பெருமாளைச் சரணடைந்தார். தேவப் பெருமாள் ராமாநுஜரின் கனவில் தோன்றினார்! 'ஸ்ரீ ஆளவந்தார் அரு

ளிய மாயாவாத கண்டனத்தை எடுத்துக் கூறி யக்ஞ மூர்த்தியை வெல்லும்' என்று சொல்லி மறைந்தான். பொழுது விடிந்தது! பகவானின் நியமனத்தைப் பெற்றுச் சென்ற ராமாநுஜர் யக்ஞ மூர்த்தியை வென்றார். அவரும் ராமாநுஜரின் சீடராக மாறினார். ராமாநுஜர் அவரை ஸ்ரீவைஷ்ணவராக்கி, 'அருளாளப் பெருமாள் எம்பெருமானார்' என்று பெயரிட்டு அவருக்கு ஆசார்ய பீடத்தைக் கொடுத்தார். ராமாநுஜரின் கனவும் பலித்தது! தேவப் பெருமாளின் பேரருளால் ஒரு மஹாசாரியர் ஸ்ரீவைஷ்ணவத்திற்குக் கிடைத்தார்.

அன்றும், இன்றும், என்றும் — வரந்தருமாமணி வண்ணன் பேரருளாளன், பிரம்மா முதலானோர்க்கு எப்பொழுதோ வரங்களைக் கொடுத்தான்; வரதன் என்று பெயர் பெற்றான் என்று நினையாதீர்! பக்தியோடு அவனிடம் சென்று அவனை வணங்கி, 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று ஆண்டாள் அருளிச் செய்ததைப் பின்பற்றி எவர் எதை வேண்டினாலும் இப்போதும் கொடுக்கிறான். எப்போதும் கொடுப்பான். தன்னை அடைந்தவரின் துன்பத்தை நீக்குவதற்கன்றோ அத்திகிரியில் அமர்ந்திருக்கிறான்! அவனை அடைந்து அருந்துயர் நீக்கிக் கொள்ளுங்கள் நல்ல வரங்களை வேண்டிப் பெறுங்கள். வரதா! நீ என்றென்றும் வரங்களைக் கொடுத்துக் கொண்டே பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்திரு என்கிறார் நம் மணவாள மா முனிகள்!

அத்யாபி ஸர்வ பூதாநாம் அபீஷ்ட பலதாயிநே |
ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம் ||

திருமழிசை ஆழ்வார்

மஹீஸார க்ஷேத்திரத்தில் தவம்புரிந்து கொண்டிருந்த பார்க்கவ மகாமுனிவருக்கும் அவரது தவத்தைக் கலைக்கவந்த கனகாங்கி என்ற தேவமாதிற்கும் தைமாதம் மகநக்ஷத்திரத் தன்று அவதரித்தார் திருமழிசை ஆழ்வார். ஆனல் தேவமாது அந்தக் குழந்தையை அருகிலிருந்த பிரப்பம் புதரில் எறிந்து விட்டு தேவலோகம் சென்றுவிட, பிரம்பறுக்க வந்த வேளாளன் ஒருவன் இக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்க்கலானன். அந்தக் குழந்தையே திருமழிசை ஆழ்வார்.

எம்பெருமானுடை விசேஷ அருளால் பசி தாகம் போன்ற உலகவியற்கைகள் இவரை அனுகவில்லை. இவர் தம்முடைய அருளால் ஒரு கிழத்தப்பதிகளுக்கு ஆண்மகவு ஒன்று பிறந்தது. அதற்கு கணிகண்ணன் என்று பெயரிட்டு ஆழ்வாருடைய சீடராக்கினர் பெற்றோர்.

ஏழுவயதிலேயே ஞானத்தை அடைந்த ஆழ்வார் பௌத்தம், சமணம் போன்ற மதங்கள் எல்லாவற்றிலும் புகுந்து அம்மதத்திற்கேற்ப பல நூல்களை இயற்றினர். அவ் வாறே சைவமதத்தில் புகுந்து சிவவாக்கியர் என்ற பெயர் பூண்டு பல நூல்களையும் இயற்றிச் சைவராகவே வாழ்ந்து வந்தார். பின்னர் பேயாழ்வாரால் திருத்தப்பட்டு ஸ்ரீவைஷ் ணவரானர். அதுமுதல் தூயபக்தியுடன் எப்போதும் திருமாலையே சிந்தை செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் அவ்வாறே திருமாலைச் சிந்தை செய்து கொண்டு தம் கந்தைத் துணிகளை தைத்துக் கொண்டிருந்த போது அவ் வழியாக வந்த சிவபெருமான் இவரை அணுகினன். தம் வரவுக்கு அடையாளமாக ஏதேனும் வரமளிக்க விரும்பினன். அதுகண்ட திருமழிசையாழ்வார் தமக்கு மோக்ஷமளிக்குமாறு கேட்க அது தன்னல் முடியாது என்றும் அதற்கு ஸ்ரீமந்நாரா யணனே அதிகாரமுள்ளவன் என்றும் கூறினன். இவ்வாறே

(தொடர்ச்சி 41ம் பக்கம் காண்க)

மார்கழி மாதப் பெருமை

ஸ்ரீ உ. வே. P. R. வரதாசாரியர்

"அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது", "மக்கள் யாக்கையில் பிறத்தலுமரிதே" எனும் ஆன்றோர் வாக்கின்படி இவ்வுலகில் மானிடப் பிறவி கிடைக்கப் பெறல் நமது பாக்கிய மேயாம். அப்படி மானிடப்பிறவி பெற்றவர்கள் நற்கதி யடைய பலவித வழிகளை உபதேசித்திருக்கிறார்கள் நம் முன் னோர். அவ்வழிகள் அவரவர் காலத்துக்கேற்பவும், சக்திக் கேற்பவும் அமைவதாகும்.

தற்காலத்துக்கு வெகு சுலபமானதும் எல்லோராலும் அநுஷ்டிக்கக் கூடியதுமான சிறந்த வழி எம்பெருமானுடைய திவ்விய நாம சங்கீர்த்தனம் — அதாவது எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த பரம் பொருளை வாயார வாழ்த்தி வழி படுதலேயாம்.

சகல வேத சாரமாய் கீதாசாரியன் திருவாக்கினின்றும் மூன்று லோகங்களுக்கும் உபகாரார்த்தம் வெளிப்பட்ட, எம்மதமும் சம்மதமென அங்கீகரிக்கும் கீதாசாஸ்திரத்தில் இவ்வழியைப் பண்டித பாமரர்க்கும் எளிதில் விளங்க கண் ணன் காட்டிய வழியாகும்.

பன்னிருதிங்களும் இவ்வழி பாட்டுக்கு ஏற்ற காலமேயா யினும் அவற்றுள் மார்கழித் திங்கள் சிறந்ததாகும். கீதாசார் யன் அருள் வாக்கால் மாதங்களுள் நான் மார்கழி மாதமாய் இருக்கிறேன் என்று அருளியிருப்பதால் அதன் மேம்பாடு எளிதின் விளங்கும்.

நம்முடைய கணிதத்தில் 12 மாதங்கள் கொண்டது ஒரு வருடம். வருடத்தில் இரண்டு அயநங்கள். ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் முடியும் வரை தக்ஷிணாயநம், தைமாதம் முதல்

ஆனிமாதம் முடிய உத்தராயணம். இப்படி இரண்டு அயநங்கள் கொண்ட ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாள் ஆகிறதென்றும் அதில் ஆறு மாதங்கள் கொண்ட உத்தராயணம் பகலென்றும் ஆறு மாதங்கள் கொண்ட தக்ஷிணாயநம் இரவென்றும் பெரியோர் பணிப்பர். ஆக, பகல் பொழுது ஆரம்பிக்கப்படும் தைமாதத்துக்கு முந்தின அருணோதய காலம் மார்கழி மாதம் ஆகிறது "உஷப்ரஸஸ்து கார்க்கேய!" என்ற கர்க்க மகரிஷி வாக்கின்படி விடியற்காலைப் பொழுதாகிய மார்கழிமாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாதலால் அவர்களுக்கு எம்பெருமான் ஸ்ரீவைகுண்டநாதனை சுப்ரபாத கானம் செய்து வழிபடும் நேரமாகிறது. அதனால் 'ப்ராம்ம முகூர்த்தம்' எனவும் வழங்கப்படுகிறது.

மார்கழி மாதம் அதிக சீதமும் அதிகஉஷ்ணமும் இல்லாத காலம். இந்த மாதத்தில் எம்பெருமானை பூஜாக்ரமங்களோடு இறைஞ்சி வழிபடுதல் சாலச் சிறந்ததாகும். இம்மாதம் பௌர்ணமியன்று புதுதான்யங்களைக் கொண்டு ஹவிர்ப்பாகம் செய்வது வைதிக சாஸ்திரத்தில் நியமிக்கப்படுகிறது. இதை ஆக்ர ஹாயரிகம் என்றும் பேசுவர் (ஹாய—வருஷம்: அக்ர—தொடக்கம்) மழையின்றி இட்ட பயிர் தீய்தல் அல்லது வெள்ளத்தால் இட்ட பயிர் அழிதல் இரண்டும் இல்லாத காலம். மலைகளிலும் சமவெளிகளிலும் எல்லா விதைகளும் முளையிடும் காலம்.

காலை, நண்பகல், எற்பாடு என்று பகற் பொழுதையும் மாலை, யாமம், வைகுறு என்று மாலைப் பொழுதையும் இருமுப்போதாகப் பிரிப்பர் பெரியோர். ஆகவே வைகறைப் போது மனம் தெளிவடைந்திருக்கும் காலம். எம்பெருமானை வழிபடுவதற்கு ஏற்றகாலம்.

வைகறைப் போதில் எழுந்து நன்னீரில் நீராடி நாமசங்கீர்த்தனம் செய்வது சாலவும் நன்மை தரும். இம்மாதத்தில் கன்னிகைப் பெண்கள் தங்களுக்கு நல்ல கணவன் அமைய வேண்டும் எனும் பிரார்த்தனையைக் கொண்டு விடியற்காலை

யில் எழுந்திருந்து தன்னோடொத்த இளம்பருவக் கன்னிகைகளை அவரவர் இல்லங்களினின்றும் எழுப்பிச்சேர்த்துக்கொண்டு அனைவரும் ஒரு தடாகத்தில் நீராடி எம்பெருமான் திவ்விய நாம கீர்த்தனம் செய்வது புராதன காலம் தொட்டு வழக்கத்தில் இருந்து வருகிறது. பின்னர் சத்வகுண ஆகாரமாக மிளகு கலந்த அன்னம் ஒருசிறிது புசிட்பர். விரதமாக இருந்து பொழுதைக் சழிப்பர். மார்கழி நோன்பு அல்லது காத்யாயனி விரதம் என இதைச் சொல்வர். முடிந்த பிறகு கடைசிநாள் புது தான்யம் கொண்டு சூரிய பகவானை ஆராதித்து நல்ல பூரணமாக உணவு கொண்டு பொங்கல்திருநாள் கொண்டாடுவர்.

மாதர்கொள் மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரையின் முன் ஈரைந்தாகிய தினங்கள் தம்மில்
மேதகு பனைகள்தோறும் அழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மில் கூடிபுனல் தடமாடல் செய்வார்.

திருப்பாவையில் இன்றைய செய்தி

ஆங்கிலத்தில் ஸ்ரீமதி M. D. வேதவல்லி
தமிழாக்கம் ஸ்ரீமதி M. A. ஜானகிஸ்ரீநிவாஸன்

பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டள் அருளிச் செய்துள்ள பிரபந்தம் திருப்பாவை ஆகும். 30 பாசுரங்கள் கொண்ட அந்திருப்பாவையில் ஆண்டாள் எல்லாக்காலத்துக் கும் எல்லாமனிதர்களுக்கும் பொருந்தும்படி உபதேசம் செய் கிருள். திருப்பாவையின் அர்த்தங்களை அறிவதற்கு முன்பு பாகவதத்தில் ஒரு பகுதியை நாம் கொஞ்சம் அறியவேண்டும்.

கண்ணன் திருவவதாரம் செய்த காலத்தில் கோபிகள் மழைக்காக ஒரு நோன்பு நோற்ருர்கள் என்றும், முடிவில் கண்ணனையே அடைந்தார்கள் என்றும் பாகவதத்தில் கூறப் படுகிறது.

அதையறிந்த ஆண்டாள் தன்னையும் தன்னைச் சேர்ந்தவர் களையும் கோபிகைகளாக பாவித்துக்கொண்டு (அநுகரித்து) ஒரு நோன்பு நோற்ருள். அது பாவை நோன்பு எனப்படும். அதன்படி தன் மற்றதோழிகளையெல்லாம் எழுப்பிக் கொண்டு நீராடப்போவதாக திருப்பாவையை ஆரம்பிக்கிருள். அதற்காக மழைத்தேவதையை மழை பொழியும்படி வேண்டுகிருள், "பெய்திடாய் நாங்கள் மார்கழி நீராட" .... என்ற நாலாம் பாட்டினுல்.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது ஆண்டாள் கேவலம் ஸ்நாநம் செய்வதற்காகவே எல்லோரையும் எழுப்பி அழைத்துக் கொண்டு போவது போல் தோன்றும். ஆனுல் இதுவே அவ ளுடைய நோக்கமாக இருந்தால் அவள் ஒரு குளத்திற்கன்ரோ போய்ச் சேர்ந்திருக்க வேண்டும்! ஆனுல் அவர்கள் நந்தகோபர் திருமாளிகைக்குப் போய்ச் சேர்ந்து, நப்பின்னையையும்

கண்ணனையும் எழுப்பி, அவர்களுக்குக் கைங்கர்யம் செய்யும் பாக்கியத்தை அளிக்குமாறு வேண்டிக் கொள்வதாக அன்றோ திருப்பாவைப் பாசுரங்கள் தெரிவிக்கின்றன. ஆக, நீராடு வதற்கு ஒரு குளத்தை நோக்கிப்புறப்பட்டவர்கள் முடிவில் அடைந்தது பகவானையே. எனவே பகவானே அந்தக்குளம்.

வெய்யிலினால் தகிக்கப்பட்ட ஒருவன் ஒரு நதியில் இறங்கிக் குளித்துத் தன்தாபம் தீர்வதைப்போல, சம்சார தாபங்களில் கஷ்டப்படுகிறவர்களை எம்பெருமானுகிற குளத் தில் நீராடி தம்தம் பாபங்களையும் சம்சார தாபங்களையும் போக்கிக் கொள்ளுமாறு ஆண்டாள் எல்லோரையும் அழைக் கிருள்.

எம்பெருமானுக்குத் தாமரை போன்ற கண்கள்; தாமரை போன்ற கைகள்; தாமரைபோன்ற திருவடிகள்; தாமரை இலை போன்ற நிறமுடைய திருமேனி. ஆக இத்தனை தாமரைகளை யுடைய எம்பெருமான் ஒரு தாமரைக்குளம். இக்குளத்தில் இறங்கி அநுபவித்தால் எல்லாப் பாபங்களும் தீயினில் இட்ட தூசாகும் என்கிருள் ஆண்டாள். ஆக திருப்பாவையில் நீராட்டம் என்று ஆண்டாள் குறிப்பிடுவது எம்பெருமானை அடைந்து களிக்குதலே என்பது நன்கு விளங்கும்.

பாவை நோன்பில் முக்யமான ஒருபொருள் 'பறை' என்பது. அது ஒரு வாத்தியம். அந்தப் பறையை தனக்கு அளிக்குமாறு திருப்பாவையில் பல பாசுரங்களில் வேண்டுகிருள் ஆண்டாள். "நமக்கே பறை தருவான்," "பாடிப் பறை கொண்டு," "இறைவா நீ தாராப் பறை" என்று பலபாசுரங்களில் வேண்டுகிருள். இந்தப் பறை என்ற சொல்லின் உள்ளர்த்தம் (ஸ்வாபதேசம்) என்ன என்பதைப் பார்ப்போம்.

நீராடுவதற்காகப் புறப்பட்டவர்கள் பகவானை அடைந்தார் கள். அவனிடம் 'பறை'யை வேண்டி வந்ததாகக் கூறிக் கொண்டிருந்தவர்கள் அவனைக் கண்டவுடன் (24ம் பாட்டில்) உன்னை அருத்தித்து வந்தோம்' என்கிருர்கள். "உன்னிடத்

திலே ஒன்றை வேண்டி (அநுத்தித்து) வந்தோமல்லோம்; உன்னையே வேண்டி வந்தோம்" என்கிறார்கள். மேலே 29ம் பாட்டில் 'இற்றைப்பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்' என்று ஸ்பஷ்டமாகவே அதைத் தெரிவிக்கிறாள். ஆக, பறை என்பது எம்பெருமானிடம் செய்யும் கைங்கர்யத்தையே குறிக்கிறது என்பது நன்கு விளங்கும்.

மொத்தத்தில் ஆண்டாள் எல்லா மனிதர்களையும் அஞ்ஞானமாகிற தூக்கத்திலிருந்து எழுப்பி, பகவானிடம் சென்று சரணாகதி செய்து அவனிடம் கைங்கர்யத்தைப் பிரார்த்திப்போம் வாருங்கள் என்று கூப்பிடுகிறாள் திருப்பாவையில்.

கோபிகளின் காலத்தில் ஸ்ரீ க்ருஷ்ண்பரமாத்மா ப்ரத்யட்சமாக இருந்தான். எனவே கோபிகளால் நந்தகோபனுடைய மாளிகைக்கு நேரில் செல்ல முடிந்தது. பரமபக்தையான ஆண்டாள் கோபிகளைப்போல் அநுகரித்து பரமாத்மாவை அடைந்தாள். அந்த அளவுக்கு அவளிடம் பக்தி இருந்தது.

ஆனால் இன்று நாம் போகுமிடம் எது? ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா எங்கிருக்கிறான்? நம் கண்ணுக்குப் புலப்படாத அவனை நாம் அடைவது எப்படி? அவனே நமக்குக் கிடைக்காத போது அவனுக்கு நாம கைங்கர்யம் (தொண்டு) செய்வது எப்படி? ஆண்டாளைப் போல் கோபியர்களை அநுகரிக்கும் சக்தி நமக்கு இருக்கிறதா? அப்படி இல்லா விட்டால் எல்லாக் காலத்திலும் எல்லா மனிதர்களுக்கும் திருப்பாவை பொருந்தும் என்று கூறுவது தவறாகுமல்லவா? இதற்குப் பதிலை ஆண்டாளே திருப்பாவையில் சொல்லியிருக்கிறாள். "வையத்து வாழ்வீர்காள்" என்று இந்த உலகத்திலிருக்கும் ஜனங்கள் எல்லோரையும் குறித்து உபதேசம் செய்வதால் திருப்பாவையின் உபதேசம் இவ்வுலகிலிருக்கும் சாமான்ய ஜனங்களுக்கும் செய்த உபதேசமாகவே திருப்பாவையில் காண்கிறது.

பகவானுனவன் நம் கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொருவனுடைய இதயத்திலும் அந்தர்யாமியாய் மறைந்து இருக்கிருன். இதனை முதல்பாட்டில் "நாராயணனே" என்ற சொல்லால் உணர்த்துகிருள். கடவுளுக்கும் நமக்கும் இருக்கும் இந்த உறவு நமக்குத் தெரிவதில்லை. அதாவது அந்த உறவு பற்றிய அறிவு (ஞானம்) மட்டும் நமக்கு இருப்பதில்லை. இதற்குக் காரணம் நமது வினைப்பயனே. அதை அழித்தால் நமக்கு அஞ்ஞானம் தொலைந்து ஞானம் உண்டாகும். அதற்கு எம்பெருமானுடைய நாமசங்கீர்த்தனமே வழி. அதாவது எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடுதல். அதையே தற்காலத்தவர்களுக்கு அறிவுறுத்துகிருள் ஆண்டாள் 'பரமனடி பாடி,' 'உத்தமன் பேர்பாடி,' முகில் வண்ணன் பேர்பாட, ... பங்கயக் கண்ணன் பேர்பாட என்று பலவிடங்களில் வலியுறுத்துகிருள். எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடிஞல் பாபங்களெல்லாம் போய்விடும். அவனுடைய கல்யாண குணங்களைப் பாடுவதே அவனுக்குச் செய்யும் தொண்டாகும். அதையே "உன்சேவகமே ஏற்றிப் பறை கொள்வான்" "பாடிப்பறை கொண்டு" என்ற விடங்களில் விளக்குகிருள்.

எனவே கண்ணுக்குப் புலப்படாமல் அந்தர்யாமியாய் இருக்கும் எம்பெருமானுக்குச் செய்யும் தொண்டு, அவனுக்கும் நமக்கும் உள்ள உறவை உணர்ந்து அவனுடைய திருநாமங்களைப் பாடிக்களித்தலே.

திருப்பாவைக்கு மற்ருெரு பெருமையும் உண்டு. ஆண்டாள் மனிதர்களை அஞ்ஞான நித்திரையிலிருந்து எழுப்பி அவர்களுக்கு உபதேசம் செய்திருப்பதுபோல் எம்பெருமானையும் யோக நித்திரையிலிருந்து எழுப்பி இவ்வுலக ஜனங்களின் கஷ்டங்களை போக்கிக் காக்கும்படி ப்ரார்த்திக்கிருள். இப்படி ஒரு பக்கம் நம்போன்றவர்களுக்கு பகவானின் நாமசங்கீர்த்தனம் செய்யும்படி உபதேசம் செய்திருக்கிருள். மற்ருெரு பக்கம் இவ்வுலகை ரக்ஷிக்கும்படி பரமாத்மாவிடத்தில் பிரார்த்தித்து சரணுகதி செய்திருக்கிருள். ஆக திருப்பாவை எல்லாக் காலத்திலும் எல்லா மக்களுக்கும் பொருந்தும்படி அமைந்திருக்கும் பிரபந்தமாகும். ★

அநந்தாழ்வார் வைபவம்

இப்புத்தகம் 24—12—78 அன்று ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீபெரும்பூதூர் யதீந்த்ரப்ரவண யதிராஜஜீயர் ஸ்வாமி தலைமையில் வெளியிடப்பட்டது. ஸ்ரீ உ. வே. V. N. வெங்கட வரதாசாரியர் ஸ்வாமி, அட்வொகேட் முதல் பிரதியைப் பெற்றுக் பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீராமாநுஜரின் பிரதம சீடரான அநந்தாழ்வானைப் பற்றிய விவரங்களும் பல அரிய வண்ண படங்களும் அடங்கிய புத்தகம்.

விலை ரூ. 3-00
(தபால் சிலவு தனி)

பகவத் கீதாஸாரம்

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

ச்லோ. 47. [*விஸ்ருஜ்யஸஶரம் சாபம் ஶோக ஸம்விக்நமாநஸ:, ரதோபஸ்த உபாவிஶத்*] அர்ஜுநன் நான் இவர்களோடு போர்புரிய மாட்டேனென்று சொல்லி அம்புகளையும் வில்லையும் விட்டெறிந்து தேர்முட்டியில் உட்கார்ந்து விட்டானென்கிறது. ஸ்ரீராமாயணத்தில் ராமராவணயுத்தம் நடக்கையில், *யோவஜ்ரபாதாஶநி ஸந்நிபாதாத் சுக்ஷுபே நாபி சசால ராஜா, ஸ ராமாபாணாபிஹதோ ப்ருஶார்த்த: சசால சாபஞ் ச முமோச வீர:* என்று இராவணன் சளைத்துப் போய் வில்லைப் பொகட்டுவிட்டானென்றது. வில்லைப் பொகட்டு விட்டானென்பதில் இராவணனுக்கும் அர்ஜுநனுக்கும் ஸாம்ய மிருந்தாலும் ஹேதுவில் நெடுவாசியுள்ளது. இராவணன் ஓய்ந்தது அஶக்தியினால்; அர்ஜுனன் ஓய்ந்தது அஶக்தியினாலன்று, தர்மத்தில் அதர்மபுத்தியாலே. இதனை ஆளவந்தார் தாமருளிய கீதார்த்தஸங்க்ரத்தில் (5) *அஸ்தாநஸ்நேஹ காருண்ய தர்மாதர்ம(ப)தியா ஆகுலம், பார்த்தம் ப்ரபந்ந முத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம்* என்கிற ஶ்லோகத்தினால் ஸூசிப்பித்தருளினார். இந்தச்லோகத்தில் (உத்திஶ்ய) என்றதற்கு எம்பெருமானார் (அபதிஶ்ய) என்று பொருள் திருவுள்ளம் பற்றினர். அவதாரிகையில்— “பாண்டு தநய யுத்தப்ரோத்ஸாஹந வ்யாஜேந பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷ ஸாதநதயா வேதாந்தோதிதம் ஸ்வவிஷயம் ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதம் பக்தி யோகம் அவதாரயாமாஸ” என்றருளிச் செய்திருப்பது காண்க. திருவாய்மொழியில் (4-8-6) *அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய, நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத்தொருமூர்த்தி* என்றருளிய பாசுரமே ஆளவந்தார்க்கும் எம்பெருமானார்க்கும் வழிகாட்டியாயிருந்தது.

இரண்டாமத்யாயத்தில் பதினோராவது ச்லோகமாகிய "அசோச்யாந் அந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே, கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:" என்கிற ச்லோகந்தான் உபதேசத்தின் உபக்ரமமாகவுள்ளது. இதற்கு முன்னே அர்ஜுனன் வாயில் "சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம் என்று வெளிவந்திருக்கிறது. 'கண்ணா! எனக்கு தர்மாதர்மங்கள் தெரியவில்லை; எனக்கு ச்ரேயஸ் ஸென்று நீ அறுதியிட்ட பொருளை எனக்கு உரைப்பாயாக! உனக்கு நான் மித்திரன் மாத்திரமல்லேன்; சிஷ்யனுமாகிறேன்; இதோ உன் திருவடிகளில் வீழ்ந்து யாசிக்கிறேன் காண்; எனக்கு ஹிதாஹிதங்களை யுபதேசிப்பாயாக' என்று அர்ஜுநன் சொல்லும்படி செய்து விட்டான் கண்ணபிரான். இந்த ப்ரார்த்தனையைப் பெறுமல் சிறந்த சாஸ்த்திரத்தை யுபதேசிப்பது தகுதியன்றுதலாலும், நிர்வேத மில்லாதவனது வாயில் இந்த பிரார்த்தனை வெளிவராதாகையாலும் இத்தனையும் கண்ணபிரான் செய்துவைத்த வொரு நாடகம் என்பது அறியத்தக்கது. ஆகவே அர்ஜுனனுக் குண்டான வ்யாமோஹம் அவன் தன்னுடைய ஸ்வபாவத்தாலுண்டானதன்று மாயப்போர்த் தேர்ப்பாகனுடைய மாயமந்திரம் செய்வித்த செயல் என்றதாயிற்று. இல்லையாகில் கீதாசாஸ்த்ரம் அவதரிக்க அவகாசமே யிராதன்றோ.

போர்புரிய மாட்டேனென்ற அர்ஜுனனைப் போரில் மூட்டுவதற்கு இந்த கீதாசாஸ்திரத்தில் சொல்லப்படுகிற விஷயங்களித்தனையும் வேணுமோ? க்ஷத்ரியதர்மோபதேசமொன்று போதுமே; ப்ரக்ருதத்திற்கு அநபேக்ஷிதங்களான அதிக விஷயங்களை இதில் பரக்கக்கூறி யிருப்பது ஏன்? என்கிற இரண்டாவதான ஆலோசனைக்கு இனிச் சொல்லுகிறோம். ஏதோ வொரு வியாஜத்தையிட்டு அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களை வெளியிடவேணுமென்று துணிந்த கண்ணபிரானது திருவாக்கில் இது ஆவச்யகம், இது அநாவச்யகம் என்று வரையறுக்க நாமார்? விஷயங்களானவை ப்ரஸக்தம் அநு

ப்ரஸக்தம் என்று இருவகைப்படுமன்றே? எந்த சாஸ்த்ரமும் ப்ரஸக்த விஷயங்களோடு மட்டும் நிற்காது. அநுப்ரஸக்த விஷயங்களும் சேர்ந்தே நிற்கும். ஸ்வாமி எம்பெருமானார் தம்முடைய கீதாபாஷ்ய அவதாரிகையின் முடிவில் "பாண்டு தநய யுத்தப்ரோத்ஸாஹநவ்யாஜேந பரமபுருஷார்த்த லக்ஷ ணமோக்ஷஸாதநதயா வேதாந்தோதிதம் ஸ்வவிஷயம் ஜ்ஞா நகர்மாநுக்ருஹீதம் பக்தியோகமவதாரயாமாஸ" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீ ஸூக்திகளை மீண்டும் அநுஸந்திப்பது. அர்ஜுநனை யுத்தத்தில் உத்ஸாஹப்படுத்துவது என்பது வ்யாஜமாத்ரமென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத் திற்கு ஸாதனமாக வேதாந்தங்களில் ஓதப்பட்டதாய் ஜ்ஞான கர்மங்களை அங்கமாகவுடைத்தாயிருந்துள்ள பக்தியோகத்தை அவதரிப்பிப்பதுதான் இந்த கீதா சாஸ்த்ரத்திற்கு ப்ரதாந லக்ஷ்யமென்றும், தெரிவித்தருளினாராயிற்று. ஆகவே முமுக்ஷுக்களுக்கு ஜ்ஞாதவ்யங்களான ஸகலார்த்த ஸாரங்களும் இந்த கீதாசாஸ்த்ரத்தில் தெள்ளமுதாக அமைந் துள்ளன வென்றதாயிற்று.

★

தை மாத ராசிபலன்

ஸ்ரீரங்கம் குண்டலம் R. திருமலாசாரியர் ஸ்வாமி

மேஷம் : (அசுவதீ, பரணீ, கார்த்திகை 1 பாதம்) சொந்த வாழ்க்கையில் சிறந்த மகிழ்ச்சியுடன் இருப்பதுடன், குடும்பத்தில் ஆசாபாசங்களால் நிறைவு ஏற்படும் வீடு, வாஹன வசதி நன்றாக அமையும், கல்யாண சிலவுகள். ஏற்படும். நண்பர்களிடம் அதிக உதவி எதிர்பார்ப்பது ஏமாற்றமளிக்கும். புத்திசாலித்தனமாக இருப்பதுடன் சனி ப்ரீதி செய்வதால் (ஸ்ரீநரஸிம்ஹ வழிபட்டால்) தொழில் வழியில் முன்னேற்றமும், பிறர் பாராட்டும் கிடைக்கும். வெளியூர் பயணத்தை கூடியமட்டில் தவிர்ப்பது நலம்.

ரிஷபம் : (கார்த்திகை 2-4 பாதம், ரோஹிணீ, மிருகசீர்ஷம் 1-2 பாதம்) இம்மாதம் முழுவதுமே உறவினர்கள், சிறு குழந்தைகளுடைய தேஹநலன் பற்றி மனக்கவலையுண்டாகும். தொழிலில் எதிர்பாராத சிறு நஷ்டங்களும், உத்யோகமாகில் ஏதேனும் சிறு சலனங்களும் ஏற்படும். தொலைவு பயணங்கள் ஒத்திப்போட வேண்டியவை சிறு பயணத்திலும் நல்லவர்கள் துணை கொள்ளுங்கள். மனைவி மக்கள் நலனில் பூரண கவனம் தேவை. குரு ப்ரீதியாக வியாழன் தோறும் ஆஞ்சனேயர் வழிபாடு நல்ல பலனளிக்கும்.

மிதுனம் : (மிருகசீர்ஷம் 3-4, திருவாதிரை, புனர்பூசம் 1-3.) சிறிய ஏமாற்றங்களால் மனம் தளராதீர். சிறந்த முயற்சி செய்வதில் முடிவு எடுக்க முடியாமல் போகும். தொடர்ந்து வரும் சிக்கல்களை சிந்திக்காமல் பொறுத்து இருந்து வரும் மாதங்களில் திர்க்க முயலவும். நெருங்கிய உறவினர்கள். (கணவன்–மனைவியிடம்கூட) அபிப்ராய பேதமும் குமுறலும் இருக்கும். மற்றவர் உங்களை மதித்துப் போற்றுவர். அரசாங்க அலுவல்களில் வெற்றியும், தனலாபமும் உண்டாகும். திருமணமாகாமல் இருந்தால், அதற்குரிய முயற்சி செய்வது பலன்தரும். லாட்டரி லாபம் உண்டு.

கடகம் : (புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம்) தோழர்களுடன் மிக கவனமாகப் பழகாவிடில் தனிமைப் படுவீர்கள். எதிர்பாராத திடீர் மனஸ்தாபம் ஏற்படும். அமைதியின்மை, ஏமாற்றம் இவைகளுக்கு வசமாகாமல் இருக்க பெரியோர்களின் ஆசி தேவை. மனைவியுடன் உல்லாசமாக இருக்கும் ஸந்தர்பபம் கனிந்து வரும். வழக்கமான கார்யங்களைத் தவிர புது முயற்சிகள் வேண்டாம். கடின உழைப்பு தேவை. லாட்டரி ஈடுபாடு கூடாது.

ஸிம்ஹம் : (மகம், பூரம், உத்தரம் 1 பாதம்) திருமணம் ஆகாதவர்களுக்கு வரும் ஸித்தார்த்தி வருடம் திருமணம் நடக்க ஏற்ற முயற்சிகளை இப்பொழுது தொடங்குவது நலம். தன்னடக்கமும் மனிதாபிமானமும் மிகவும் தேவை. யாரிடமும் பகைமை கொள்ளாதீர். கைப்பொருளைப் பாது காக்க முயலவும். கௌரவ பங்கம் ஏற்படும். அதற்காக சண்டையிடுவது மேலும் வருத்தம் அளிக்கும். கடும் பணியாலேயே மன அமைதிகிட்டும். லாட்டரி ஈடுபாடு வேண்டாம். இராமபிரானை துதிப்பதால் நன்மை உண்டாகும்.

கன்னி : (உத்தரம் 2–4, ஹஸ்தம், சித்திரை 1–2 பாதம்) சட்ட (கோர்ட்) வியவஹாரங்கள் தொல்லை கொடுக்கும். வாஹனம் (கார் முதலிய) நிறுத்தி வைக்கும் இடங்களில் மிகுந்த கவனம் தேவை, இல்லையேல் அனாவசிய சிறு குற்றங்களுக்கு விசாரணை மேற்கொள்ளப்படும். நெருங்கிய நண்பர்கள் கூட சிறு அபிப்ராய பேதத்தால் விலகுவார்கள். வாக்குச் சாதுரியமும் மனோதிடமும் காரிய வெற்றி தரும். தொழில் இடர்பாடுகள் கொஞ்சம் குறையும். கலைத் துறையிலும் காரியாலயங்களில் பணியிலும் முன்னேற்றம் காணலாம். சுபகாரியங்கள் நடக்கும்.

துலாம் : (சித்திரை 3–4, ஸ்வாதீ, விசாகம் 1–3) த்ருப்திகரமான மாதமல்ல. உங்களுடைய தவறாலேயே மன அமைதி கெடும். உத்யோகத்திலும் குடும்ப நிர்வாஹத்

திலும் மிகுந்த கவனம் தேவை. புதுமுயற்சியில் ஈடுபடாதீர். பணவிரயமும் இடமாற்றமும் உண்டு. தனிமையில் நாராயண சிந்தனையே மனஅமைதி தரும். விட்டுப்போன கணக்கு வழக்குகளை கவனித்து சரி செய்வதற்கு நல்ல காலம். உள்ளூர் வ்யவஹாரங்களில் தலையீடு நேரும். கவனமாக இருக்கவும்.

வ்ருச்சிகம் : (விசாகம் 4, அனுஷம், கேட்டை) புதிய சிநேஹிதர்களால் நன்மை ஏற்படும். புது உடைமைகள் சேர்ப்பதற்கு உகந்த காலம். வியாழன் வெள்ளிக் கிழமை முயற்சிகள் சிறந்த வெற்றிதரும். பண வரவு அதிகரிக்கும். அடுத்த மாதங்களில் ஏற்படும் லாபங்களுக்கு இப்பொழுதைய முயற்சி அவசியம். புதிய மூதலீடுகளுக்கு ஏற்பாடு செய்யலாம். தொழில் துறையில் சிறந்த முன்னேற்றமும் காணலாம். குடும்பத்தில் நிம்மதி தொடரும். லாட்டரியில் வெற்றி காணலாம். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

தனுஸு: (மூலம், பூராடம், உத்தராடம் 1-பாதம்) கடந்த மாதம் ஏற்பட்ட தோழமையின் அனுகூலம் இம் மாதம் நன்கு அனுபவிக்கலாம். காதல் வாழ்க்கை இன்பமளிக்கும். பிணக்குகள் குறையும். சிறு பயணம் செல்வாக்கை கொடுக்கும். எதிர்பாராத புனித யாத்ரை மேற்கொள்ள நேரும். மகிழ்ச்சி நிலவும். கடிதப் போக்குவரத்தால் சாதகம் உண்டு மக்கட் செல்வங்களின் நலத்தில் அக்கறை செலுத்தி வருவது மிக அவசியம். பொறுப்புச் சுமை கூடுதலை கடுமையான உழைப்பால் சமாளிக்கலாம். கலைத்துறையில் ஈடுபட்டால் புகழ் உண்டு லாட்டரி ஈடுபாட்டை முற்றிலும் தவிர்க்கவும்.

மகரம் : (உத்தராடம் 2-4, திருவோணம், அவிட்டம் 12-பாதம்) வெட்கமும் ஒதுங்கியிருத்தலும்விட்டுப்போகும் நண்பர்களின் ஒத்துழைப்பினால் முன்னுக்கு வரலாம். எல்லோரிடமும் அதிக அன்பு செலுத்துவீர்கள். பணப்புழக்கம் தாராளமாகும். சொல்லுக்கு மதிப்பு உண்டு. வசீகரசக்தி, கண்ணியம், கவர்ச்சி

களின் வளர்ச்சியில் பாராட்டுகள் குவியும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். நற்காரியங்களில் துணிச்சலோடு ஈடு படலாம், கணவன்—மனைவி உறவு திருப்தியாக இருக்கும். லாட்டரியில் அதிக லாபம் இல்லை.

கும்பம் : (அவிட்டம் 3-4, சதயம், பூரட்டாதி 1-3 பாதம்) மன ஈடுபாட்டால், பரஸ்பர விரோத சூழ்நிலைகளில் சிக்க நேரிடும். கவனக் குறைவினால் கௌரவம் பாதிககப் படும். காரியாலயங்களில் பாராட்டப்படுவீர். அன்பு மொழி பேசுவதால் விரோதங்களைத் தவிர்க்கலாம். சுலபமான காரி யங்களிலும் தாமதம் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் யோசனையைக் கேட்டு நடப்பது அவசியம். மந்திரம், மருந்து களால் உடல் நலத்தைப் பேணுங்கள். அதிக வீண் செலவுகள் தவிர்க்க முடியாதவை மிகுந்த கவனத்துடன் இருந்தால் தான் நஷ்டங்களைத் தவிர்க்க முடியும். மொத்தத்தில் சுமா ரான மாதம்.

மீனம் : (பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி) புதிய முயற்சிகளில் ஈடுபட ஸரியான மாதம். மாதக் கடைசியில் லாபகரமான முதலீடுகளில் வெற்றி கோலுப். வேலையின் பலன் நன்கு கிடைக்கும். பொது நிகழ்ச்சிகளில் சிறந்த பேச்சாளராக அழைக்கப்படுவீர். புகழ் ஓங்கும். வெகு நாளாகப் பைசலாகாத காரியங்கள் சிறப்பாகவும் லாப கரமாகவும் முடியும். லக்ஷ்மீகடாக்ஷம் நிறைய உண்டு. புத்தி சாதுர்யத்தால் லாபம் அதிகரிக்கும். மணமாகாதவர்களுக்கு மண ஏற்பாடு ஆகும். மணமானவர்கள் உல்லாசமாக வாழ் வார்கள். புத்திரர்களின் வெற்றி உற்சாகமளிக்கும். திருமகள் திருவருளால் நிறைந்த செல்வம் குவியும்.

தைமாதம் பிறந்தவர்களுக்கு வருடபலன் :

கடந்த கால அதிருப்தி நீங்கிவிடும். உற்சாகத்துடன் எதிர்காலத்தை நோக்குவீர். ஸித்தார்த்தி வருடம் ஆடி ஆவணி மாதங்களில் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. அப்பொழுது மிகுந்த சோர்வு ஏற்படும். செவ்வாய் மகரத்தில்

(இவ்வருடம் பங்குனி 14 வரை) இருக்கும் காலம் நல்ல புஷ்டி தைரியம் தன்னம்பிக்கையும் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவீர்கள். ஸித்தார்த்தி ஆடி ஆவணியில் மிக்க சுகாதார முன்னேற்பாடுகளை மேற்கொள்ளாவிடில் திடீரென தொத்து வியாதியால் ஓய்வில் இருக்க வேண்டி வரும். ஆனி, ஆவணி தவிர மற்ற மாதங்களில் பொது வாழ்விலும் குடும்பத்திலும் மிகவும் உற்சாகமான சூழ்நிலை நிலவும். க்ரஹரீதியாக வெளியூர் பயணங்களுக்கு இவ்வருடம் முழுதும் வாய்ப்பில்லை. ஆகையால் கடும் நிர்பந்தம் ஏற்பட்டாலொழிய பிரயாணங்களைத் தவிர்க்க முயற்சிப்பதுடன், குறுகிய காலத்தில் திரும்பி விடவும். ஊரில் வீட்டுடன் இருப்பதுதான் மன நிம்மதி தரும். மகப்பேறு இல்லாதவர்களுக்கு ஸந்தான பாக்யமேற்படும். தனவசதி பெருகும். ஸித்தார்த்தி வருட முடிவில் தொழில் அபிவிருத்தியும், இடமாற்றலும் ஏற்படும். பொதுவாக அமைதியுடன் கூடிய நல்ல வருடம்.

தேவு மற்றறியேன்—3

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

"ஸதாசர்ய ஸம்பந்தமே நமக்கு நல்வாழ்ச்சி அளிக்க வல்லது; உமக்கு நாம் இருக்கிறேம்; அஞ்சாதே இரும்" என்று பிள்ளை உறங்காவில்லி தாஸர்க்கு எம்பெருமானுர் அபய மளித்து ஆசார்யவைபவத்தை வெளியிட்டார். ஒரு ஸமயம் ஸ்ரீராமாயணத்தில் அபயப்ரதானத்தை (விபீஷணசரணுகதி) அருளிச் செய்கையில் உறங்காவில்லி தாஸர் எழுந்திருந்து, "எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஆகாயத்தில் நின்று பெருமாள் திருவடிகளே தஞ்சம் என்றிருந்தவரை, "இவரைக் கொல்ல வேண்டும்" என்று கல்லும் தடியுமாய் நின்ற முதலிகளடங்கிய பெருமாள் கோஷ்டிக்கு அடியேன் ஆளாவேனே?" என்று வினவ, எம்பெருமானுர், நான் பெற்றேனுகில் நீர் பெறுகிறீர்! பெரியநம்பி பெற்ருராகில் நான் பெறுகிறேன். இப்படி ஆசார்யஸம்பந்தமே கொண்டு மேலே பார்த்தால் நம் சடகோபர், "அவாவற்று வீடு பெற்ற" என்று அவர் வாக்காலேயே அருளிச்செய்கையால் அவர் பெற்றது ஸித்தம். ஆனபின்பு நமக்கும் ஸித்தம் என்றிரும்" என்று அருளிச் செய்தார். திருமழிசைப் பிரானும் "ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்று அவரைச் சாத்தி இருப்பார் தவம்" (நான். திரு. 18) என்றருளிச் செய்தார். ஏத்தியிருந்தார்—நம்மாழ்வார். எம்பெருமானைத் தொழுது நின்ருர். அவரைச் சாத்தியிருந்தார் மதுர கவிகள். ஆழ்வாரையே தெய்வமாகப் பற்றி இருந்தார். சாத்தியிருந்தவர் தவம் ஏத்தியிருந்தவர் தவத்தைக் காட்டிலும் சாலவும் உயர்ந்தது. மதுரகவி சொல் நம்புவார்பதிவைகுந்தம் காண்மினே! இப்படி தமது சீடருக்கு அபயமளித்தவர் மாறனடிபணிந்துய்ந்தவன்—இராமாநுசன் என்பதை நினைவில் கொள்க.

பூமகள்கோன் தென்னரங்கர் பூங்குழற்குப் பாதுகமாய்
தாம் மகிழும் செல்வச்சடகோபர்—தேமலர்த்தாட்கு
ஏய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமாநுசன்

என்கிறபடியே சடகோபருடைய திருவடிநிலை இவர் என்னும் படி ஆழ்வாரிடம் ப்ரதிபத்தி கொண்டிருந்தவர் எந்தை எதிராசன்.

பொய்யிலாத மணவாள மாமுனிகள் தம் சரித்திரத்தைத் தாமே பாடுகையாக அமைந்துள்ள பாசுரம் :

மன்னியசீர் மாறன்கலை உணவாகப்பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப்பெற்றோம்

என்றருளிச் செய்கிறார். இவர் யதீந்த்ரப்ரவணர் என்று உணர்க. "திரிதந்தாகிலும் தேவபிரானுடை கரியகோலத் திருவுருக் காண்பன் நான்" என்கிறபடியே மதுரகவிகளுக்குப் பெருமாள் தன்னைக் காட்ட, ஆழ்வாருகந்த வஸ்து என்று கண்டார். அப்படியே மாமுனிகளும் "ஏரார் அரங்கர் எதிரா சர்க்காக என்பால் வாரா நிற்பர் மகிழ்ந்து" என்று கூறிக் கொள்ளுகிறார்.

மணவாளமாமுனிகளின் மற்றுமொரு பாசுரமுங் இங்கு குறிகொள்ளத்தக்கது.

உன்னையொழிய ஒரு தெய்வம்
மன்னு புகழ்சேர் வடுகநம்பி—தன்னிலையை
என்தனக்குநீதந்து எதிராசா! எந்நாளும்
உன்தனக்கே ஆட்கொள் உகந்து

எம்பெருமான் அன்றி தேவுமற்றறியாதவராய் இருந்தவர் வடுகநம்பி. இவருடைய சரித்திரத்தில் சில திவலைகளை அநுபவிப்போம்.

இவர் தமது ஆசாரியனுன எம்பெருமானுரை எப்போதும் பிரியாமல் அவருக்குப் பணிசெய்திருப்பதையே தவப்பயனுகக் கொண்டவர். ஒருசமயம் இவர் திருமடப்பள்ளியில் உடையவருக்காகப் பால் காய்ச்சிக்கொண்டிருக்கையில் நம் பெருமாள் திருவீதியில் எழுந்தருள, உடையவர் பெருமாளை ஸேவிக்கவா என்று கூப்பிட்ட "தேவரீரது பெருமாளை ஸேவிக்க வந்தால் அடியேனது பெருமாளுக்குக் காய்ச்சும் பாலமுது பொங்கி பாழாகுமே" என்று அங்கேயே இருந்து விட்டாராம்.

ஒருகால் தமது ஆசாரியனுடன் இவர் வெளியூர் செல்ல நேரிட்டது. அப்போது இவர் தமக்குத் திருவாராதனமான (தாம் பூஜிக்கும்) எதிராஜபாதுகைகளையும் ஆசாரியன் திருவாராதனமான பெருமாளையும் ஒரே மூட்டையில் எழுந்தருளப்பண்ணி வந்தது கண்ட எதிராசர் இவரைக் கோபிக்க, "அடியேனுடைய திருவராதனப்பெருமாள் (ஆசார்ய பாதுகை) தேவரீரது பெருமாளுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவராகமாட்டார்" என்று பதில் சொன்னுராம்.

பெரியாழ்வார் திருமொழி (4—4—1) "நாவகாரியம்" என்ற பாசுரவ்யாக்யானத்தில் காணும் பங்க்திகள் :— (நகாவாரியம்) நாவுக்கு அகாரியம் (பொய்சொல்லுவதுபோல) உடையவர் எழுந்தருளியிருக்கிற காலத்திலே வடுகநம்பியருகே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருளியிருந்து "ஓம் நமோ நாராயணுய" என்று சொல்ல, இதைக்கேட்ட வடுகநம்பி "நாவகாரியம்" என்று எழுந்திருந்து கடக்கப்போனுர்— என்பதே.

இன்னும் இப்படிப் பல ஐதிஹ்யங்களும் உண்டு. இவர் உடையவருக்கு மிகவும் நெருங்கிய சிஷ்யர்களான முதலியாண்டானையும் கூரத்தாழ்வானையும் "இருகரையர்" என்று ஏளனம் தோற்றச் சொல்லுவராம். எம்பெருமானுரை ஒரு கரையாகவும் எம்பெரும்மானை மற்றொரு கரையாகவும்

கொண்டவராம் இவர்கள். ஸம்ஸாரம் என்ற வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுமவனுக்கு ஒரு கரை சேர வேண்டு மல்லவா?

மதுரகவிகளும் ஆழ்வார்களை மேல் சொன்னபடியே எண்ணி இருந்தவர். ஸ்ரீவசனபூஷணத்தில் லோகாசார்யன் ஸ்ரீஸூக்தி (408, 409) :—

"உண்டபோது ஒரு வார்த்தையும் உண்ணுபோது ஒரு வார்த்தையும் சொல்லுவார் பத்துபேர் உண்டிறே; அவர்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே; அவர் பாசுரம் கொண்டிவ்வர்த்தமறுதியிடக்கடவோம்" என்பது

ஆழ்வார்கள் பகவதநுபவம் பண்ணி மகிழ்ந்து மனநிறைவுடன் பேசும்போது அவனையும் அவனடியாரையும் புகழ்ந்து பேசுவர். அவ்வநுபவமில்லாதபோது, ஆர்த்தியுடன் "ஒரு நாள் காணவாராயே,' என்று கூப்பிடுவதும், தங்களுக்கு நெருங்கிய அன்பர்களையும 'உங்களோடெங்கள் இடையில்லையே" என்று வெறுப்பதுமாக இருப்பர். ஆசாரியாபிமானத்தாலே பேறு—இதுவே பேற்றுக்குப் பயமில்லாத ராஜ மார்க்கம்—என்ற அர்த்தத்தை இவர்கள் பேச்சினால் நிச்சயிக்க முடியாது. இவ்வர்த்தம் அறுதியிடுவது (நிச்சயிப்பது) ஆழ்வார்கள படும்பாட்டைக்கண்டு சிரித்து, ஆசாரியனையொழிய தேவு மற்றறியேன் என்று கொண்டு நிர்ப்பயராய் இருக்கும் மதுரகவியாழ்வாருடைய பேச்சு கொண்டுதான் முடியும். எம்பெருமானைப்பற்றினால் அவன் ஸ்வதந்த்ரனாகையால் நம்மைக் கொள்வானோ? நம் குற்றம் கண்டு தள்ளிவிடுவானோ? என்ற பயத்துக்கு இடமுண்டு. ஆசாரியனையே தெய்வமாகப் பற்றினால் இந்த பயத்துக்கு இடமில்லை. பெருமாள் ஆசாரியனிட்ட வழக்காய் இருப்பதனாலும், ஆசாரியன் எந்த நிலையிலும் நம்மைக் கைவிடானாகையாலும் பேற்றுக்கு அஞ்ச வேண்டியதில்லை.

மாமுனிகளும் நமக்கு உயர்ந்த உபதேசிக்கிறார் தமது உபதேசரத்தினமாலையில் (62) இது நிச்சலும் நமக்கு நினைத்து ஒழுகத்தக்கது :

உய்யநினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே
வையும் அன்புதன்னை இந்தமாநிலத்தீர்!—மெய்யுரைக்கேன்
பையரவில் மாயன் பரமபதமுங்களுக்காம்
கையிலங்கு நெல்லிக்கனி.

அப்படி அன்பில்லாதார் "அன்பு தன்பால் வைத்தாலும் இன்பமிகு விண்ணாடு தானளிக்க வேண்டியிரான்" என்பதும் மாமுனிகள் நிச்சயித்துச் சொல்லும் பாசுரமே.

ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்துள்ள

17. T.S. வெங்கடாசலம் ஐயங்கார், B. A. தென்திருப்பேரை

18. ஸ்ரீ T.S. ராமய்யங்கார், தென்திருப்பேரை

19. ஸ்ரீ S,M. ராமாநுஜம் அய்யங்கார், M. A. பெருங்குளம்,

20 ஒரு ஆஸ்திகர், ஆழ்வார் திருநகரி

ஆகியோருக்கு எங்களது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

THIRUPPAVAI WAVE

Sri U. Ve. P. B. Ananthachariar, Advocate.

Waves of the Ocean never stop. They rise and fall; increase and decrease; dash and recede; but they never end nor perish. King Kanute's order to stop the waves was drowned in the noise and fury of the waves. So also the waves of the ever-lasting song of the Divine Mother, Bhoodevi in her Avatar as Sri Andal, cannot be stopped. In every Vishnu Temple and in the sacred homes of His Bakthas the last two benedictory verses beginnig with "Sirram sirukalai" and "Vengakkadal" of Tiruppavai are recited daily while concluding the Pooja and prayer. During this pleasant Tamil month of Margazhi all the 30 songs of Tiruppavai are sung daily in those and other religious centres. It is in this sacred month Vidwans vie with each other during the Annual Tiruppavai Sadas in expounding to and educating the Astika aspirants with the treasure of ethical values hidden in each verse.

Though the source and author of this in imitable and criptic composition emanated from Sri villiputhur, the waves thereof spread towards the North and found pleasing reception and nourithment in this vast city of Madras. During the last five decades in particular, the waves of Tiruppavai spirit and culture have been on the increase, thanks to the matchless exposition by erudite Vidwans of the tenets and lessons underlying each p arse and word strung to the garland of Tiruppavai with which the maiden Goddess captivated the heart of the gracious Lord Krishna.

Sri Krishna Samslesham is ak n to a bath in the sea of bliss and the particip ints emerge out of it washed out of their sins and with purity of thought towards the Supreme Being. So also adherents of Tiruppavai shake off their mundane temptations and yearn after Divine grace.

Saltish waves of the Ocean are absorbed by the hot rays of the sun, pushed hither and thither by the winds in Vaporous state, get purified and condensed and sprinkle down as welcome rains not only to feed mankind and other animates but also to facililate production. So also our Acharyas and their descendants assimilate the Veda Sastras and Puranic lore imbedded in this eternal and Divine Tiruppavai and shower on us in lucid lectures the resulting lessons for our spiritual uplift

The depth of the Ocean, its expanse and the precious things lying at its bottom are all beyond our ken and knowledge. So also is Tiruppavai with its inexhaustive wealth of wisdom, unlimited themes to delve in and copious reference from Ithihasa and purana. So Vidwans of high eminence and wide learning are still diving deep into the concept and composition, techniques and teachings of Tiruppavai so dexterously woven into each word and pharse. Just as the author Her self could not bear the pangs of her feelings and thougth till she expressed the same in the words which flowed and formed this flowery song, so also our great Pandits like Mahamahimopadyaya P. B. Anangacharya and Vakamrutavarshi. K. Varada charya do not rest contest in this month till they pour out

for the benefit and enlightment of the Astika public their acquisitions from an intensive study of this immortal master-piece of Sri Andal.

The Ocean is the creature of Nature and the waves are inseparable from it. The pleasing rhythm emanating from the movement of the waves and the crystal foam rolling over their crest afford a feast to the ears and the eyes. So also is the music of Tiruppavai when set to the prescribed tune and Dasan of Vidwans beeming with its cult writ large on their faces.

16-ம் பக்க தொடர்ச்சி......
அவர் மேலும் பலகேட்க அவற்றிலெல்லாம் தனக்கு அதிகாரமில்லை என்று சிவபெருமான் கூற கடைசியில் திருமழிசையாழ்வார் கிண்டலாக "இவ்வூசி செல்லும் வழியே நூலும் செல்வதற்கு வரம் தரவேணும்" என்று கேட்க சினமுற்ற சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணைத் திறந்து நெருப்பை உமிழ்ந்தார். திருமழிசையாழ்வாரும் தம்திருவடியின் பெருவிரலிலுள்ளதொரு கண்ணைத் திறந்துவிட சிவபெருமானது அக்கினியையும் இது தகிக்கலாயிற்று. அதுகண்டு பரமசிவனும் சாந்தமடைந்து, இவரது நாராயண பக்தியை மெச்சி பக்திஸாரர் என்று திருநாமம் சாத்தினுன்.

பின்னர் திவ்யதேச யாத்திரையாக வந்த முதலாழ்வார்கள் (பொய்கையார், பூதத்தார், பேயார்) மூவரும் இவரிருக்குமிடம் வந்து இவரைக் கண்டு அளவளாவினர். பின்னர் நால்வரும் பிருந்தாரண்யக்ஷேத்திரம் (திருவல்லிக்கேணி) எழுந்தருளி; நெடுங்காலம் தவம் புரிந்தனர். பிறகு முன்னவர் மூவரும் திவ்யதேச யாத்திரையைத் தொடர திருமழிசையாழ்வார் காஞ்சித்திருவெஃகாவை அடைந்து அங்கு எழுந்தருளியிருந்த பெருமானிடத்தில் ஈடுபட்டு அங்கேயே வாசம் புரியலானுர். கணிகண்ணனும் அவருடனே வந்து பணிவிடைகள் புரியலானுன்.

அப்போது கணிகண்ணனது கவிபாடும் திறமையைக் கேள்விப்பட்ட அவ்வூரரசன் தன்னைப் பற்றிக் கவிபாடும்படி வேண்ட கணிகண்ணனன் மனிதர்களைப் பாட முடியாது என்று மறுக்க, சீற்றம் கொண்ட அரசன் கணிகண்ணனை நாடு கடத்தினுன். கணிகண்ணனைத் தொடர்ந்து திருமழிசையாழ்வாரும் புறப்பட்டு பெருமாளையும் தம்முடன் கூட வரும்படி அழைக்க, அவ்வாறே பெருமாளும் புறப்பட்டார். பெருமாளே ஊரைவிட்டுச் சென்று விடவே ஊரே இருண்டு விட்டது. தவற்றை உணர்ந்த அரசனும் ஓடிவந்து இவர்களிடம் மன்னிப்புக்கேட்டு ஊருக்குத் திரும்பி வருமாறு வேண்டினன். அவ்வாறே கணி கண்ணனும்,

திருமழிசையாழ்வாரும் புறப்பட்டு, பெருமாளையும் திரும்பி வருமாறு வேண்ட அவ்வாறே பெருமாளும் எழுந்தருளினர். இவ்வாறு திருமழிசை ஆழ்வார் சொன்னபடியெல்லாம் பெருமாள் செய்தபடியால் அவர் 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்றும் வடமொழியில் 'யதோக்தகாரி' என்றும் அழைக்கப்பட்டார்.

பின்னர் திருக்குடந்தைக்குச் செல்வதற்காக திருமழிசை ஆழ்வார் யாத்திரை புறப்பட வழியில் பெரும்புலியூர் எனு மிடத்தில் வேதமோதிக்கொண்டிருந்த சில அந்தணர்கள் இவரைக் கண்டதும் இவரைக் கீழ்ப்பட்டசாதியன் ஒருவனுகக் கருதி வேதமோதுதலை நிறுத்திவிட்டனர். ஆனால் இவர் சென்றதும் வேதத்தைத் தொடங்க முடியாமல் திணறி, அதற்குக் காரணம் ஆழ்வாரை அவமதித்ததே என்று உணர்ந்து அவரிடமே வேண்டினர். அவரும் குறிப்பால் அவர்கள் வேதமோதும்போது நிறுத்திய இடத்தை அவர் களுக்குக் காட்டினர். அவருடைய பெருமையுணர்ந்த வேதியர் களும் அவரைத் தகுந்தபடி கௌரவித்தனர் பின்னர் திருக் குடந்தைக்கு எழுந்தருளினர். அங்கு சயனித்திருந்த பெரு மாளை நோக்கி "எழுந்திருந்து பேசு" என்று வேண்ட, அவ் வெம்பெருமானும் ஆழ்வார் மேலுள்ள அன்பால் அர்ச்சாவ தார நிலையையும் கடந்து சற்றே எழுந்திருக்க முயல ஆழ் வாரும் அதற்கு மகிழ்ந்து "வாழி கேசனே" என்று வாழ்த் தினர். இன்றும் திருக்குடந்தையில் (கும்பகோணம்) பெருமாள் உத்தான சாயியாய் (சற்றே எழுந்த திருக்கோலத்தில்) எழுந் தருளியிருப்பதைக் காணலாம்.

இவ்வாறு திருக்குடந்தையிலேயே பலவாண்டுகள் எழுந் தருளியிருந்து, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் ஆகிய இரு திவ்வியப்ரபந்தங்களை அருளிச்செய்து இவ்வுலகை வாழ்வித்தருளினர். பின்னர் அங்கேயே திருநாட்டுக்கெழுந் தருளினர்.

★

முரட்டு சம்ஸ்கிருதம்

"சாண்டில்யன்"

வங்கீபுரத்து நம்பி என்ற பிராம்மண குலோத்தமர் வேத வேதாந்தங்களை நன்ருகக் கற்றுணர்ந்தவர். வேதாந்த விஷயங்களில் எல்லோரும் அவரை சந்தேகம் கேட்பது வழக்கமேயொழிய அவர் யாரையும் சந்தேகம் கேட்பது வழக்கமில்லை. அந்த வித்வானுக்கே ஒரு சந்தேகம் வந்துவிட்டதென்ருல் அது வியக்கத்தக்க விஷயமல்லவா? ஆனுல் பெரியவர்கள் சந்தேகத்திலும் கேள்வியிலும்தானே பெரிய கிரந்தங்கள் மலர்ந்திருக்கின்றன. "கோன்வஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே" (இந்த உலகத்தில் நல்லவன் யார்?) என்று வால்மீகி கேட்டதால் ராமாயணக் கதை பிறந்தது. அதே கேள்வியை தமிழில் "உயர்வற உயர்நலம் உடையவன் எவன்?" என்று நம்மாழ்வார் கேட்டதால் திருவாய்மொழி நமக்குக் கிடைத்தது. அப்படித்தான் முதலியாண்டானும் வங்கீபுரத்து நம்பியை ஒரு கேள்வி கேட்டார்.

நவ திருப்பதிகளில் ஒன்ருன திருப்புளிங்குடியில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமான் ஸந்நிதியில் கோஷ்டி நடந்து கொண்டிருக்கிறது. அந்த கோஷ்டியில் முதலியாண்டான் வங்கீபுரத்து நம்பியுடன் நின்று பெருமாளை சேவித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பெருமாளை சேவிக்க இடைச்சிகள் கூட்டமாக வந்து தூர ஒதுங்கி நின்று சேவிக்கலானுர்கள். அவர்களைப் பார்த்த வங்கீபுரத்து நம்பிக்கு ஒரு சந்தேகம் மனத்தில் உதயமாயிற்று. "நம்மைப் போன்ற பிராம்மணர்களும் இதர உயர்ந்த ஜாதிகளும் இருக்கும்போது எம்பெருமான் கிருஷ்ணுவதாரத்தில் இவர்களிடம் ஏன் போய்ச் சேர்ந்து கலந்து விளையாடினுன்? இந்த இடைச்சிகளிடம் அப்படி என்ன உயர்வு இருக்கிறது?" என்று தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார். அந்த மர்மத்தை அறிய அந்-

தணர் கோஷ்டியிலிருந்து விலகி இடைச்சிகளுக்குப் பின்னல் போய் நின்று கொண்டு பெருமாளை சேவித்தார். சேவாகாலம் முடியும் தருவாயில் மீண்டும் முதலியாண்டான் பக்கத்து வந்து நின்றுகொண்டார்.

அனைத்தையும் கவனித்து கொண்டிருந்த முதலியாண்டான் "ஸ்வாமி! இங்கிருந்து இடைச்சிமார் பக்கம் போனீர். திரும்பவும் இங்கு வந்தீர். காரணம் என்னவோ?" என்று வினவினார்.

"நம்மைப் போன்ற உயர்ந்த ஜாதிகள் இருக்க இடைச்சிகளிடம் பெருமாள் போய் கலந்து பரிமாறக் காரணமென்ன என்று அறியப் போனேன்" என்று பதில் சொன்னார் நம்பி.

"என்ன தெரிந்து கொண்டீர்?" என்று கேட்டார் ஆண்டான்.

"ஏதும் புரியவில்லை" என்றார் நம்பி.

"பெருமாளைப் பார்த்து அவர்கள் சொன்னது என்ன?' என்று கேட்டான் ஆண்டான்.

"பாலுண்பீர், பழம் உண்டீர், பொன்னாலே பூணூல் இடுவீர், நூறுபிராயம் புகுவீர் என்று அவர்கள் பெருமாளைப் பார்த்து சொன்னார்கள்" என நம்பி அருளினார்.

"நீர் சொன்னது என்ன?" என்று மற்றுமொரு கேள்வியைத் தொடுத்தார் ஆண்டான்.

"விஜயஸ்வ, விஜயீபவ என்று சொன்னேன்" நம்பி சொன்னார் இப்படி. அவர் குரலில் கம்பீரமும் ஆணவமும் இருந்தது.

முதலியாண்டான் புன்னகை கொண்டார். "நம்பி! அங்கே போயும் உமது முரட்டு ஸம்ஸ்கிருதத்தை நீர் விடவில்லையே. என்று அந்த புன்முறுவலின் ஊடே கூறினார்; "நம்பி! பெருமான் அவர்கள் பக்கம் பார்க்காமல் நமது பக்கம் எப்படிப் பார்ப்பான்? இன்சுவைத் தமிழில் ஆத்மாவிலிருந்து எழும் இடைச்சியர் இன்பக் குரல் அவன் காதில் விழுமா, நம் குரல் விழுமா? எங்கிருந்தாலும் நாம் நலம் காணும்" என்று.

அப்பொழுது பகவத் விஷயத்தின் ஒன்பதாம் பத்தில் இரண்டாம் திருவாய்மொழியின் எட்டாம் பாட்டு சேவிக்கப் பட்டது. "தாங்கள் அன்பாரத் தமது சொல்வலத்தால் தலைத்தலை சிறந்து பூசிப்ப..." என்ற வரி நம்பியின் காதில் விழுந்தது. 'ஆகா! தங்கள் அன்பால் தாங்கள் தங்கள் சொல் வலத்தால் அதாவது தங்கள் மொழிவளத்தால் தலைத்தலை பூசிப்பதே எம்பெருமானுக்கு உகப்பு" என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டார். தமிழ் வேதத்தின் சிறப்பு அவர் உடலையும் சிந்தையையும் ஊடுருவிச் சென்றது. மனுஷ்யானந்தம், பிரம்மானந்தம், இவற்றுக்கும் மேலான பகவதானந்தம் உண்டு என்பதை நம்பி புரிந்து கொண்டார்.

ஜனவரி 79 — பிப்ரவரி 79

தை — 1154 — மகர ஸ்ரீ

14	1	ஞா	பிர 11-47, பூச 44-58, தி0-45 உ. புண்ய காலம், புஷ்யபகுளம், அதிதி,
15	2	தி	துவி 27-4, ஆயி 51-21. தி 20-22, மகர கிரு துவி திதி, கனு.
16	3	செ	திரு 32-13, மக 57 30, தி 24 25, ஸங்-சதி.
17	4	பு	சதி 36-45 பூரம் 60-0, தி 19-17.
18	5	வி	பஞ் 40-21, பூரம் 2-51, தி 22-10.
19	6	வெ	ஷஷ் 42-51, உத்ரம் 7-14, தி 29-23.
20	7	ச	ஸப் 44-3, ஹஸ் 10-30, தி 31-10, திஸ்
21	8	ஞா	அஷ் 43-57, சித் 12-29, தி 26-40,
22	9	தி	நவ 42-35, ஸ்வா 13-16, தி 27-10.
23	10	செ	தச 40-4, விசா 12-51, தி 22-36.
24	11	பு	ஏகா 36-32, அனு 11-23, தி 24-50. [ஸர்வைகா
25	12	வி	துவா 32-10, கேட் 9-1, தி 28-0
26	13	வெ	திர 27-12, மூல 5-57, தி 1-57, 28-32.
27	14	ச	சசி 21-46, பூராட 2-24, உத்ரா 56-1, சசி-அமா திதித்வயம், ஸர்வ அமா.
28	15	ஞா	● 16-1, திருவோ 54-17, தி 7-44, ச்ர வ்ர
29	16	தி	பிர 10-11, அவி 50-14, தி 3-36, மாக [சுத்தம்.
30	17	செ	துவி 4-25, திரு 54-33, சத 46-27, தி 7-6,
31	18	பு	சதி 54-5, பூரட் 43-9, தி 1-34, சதி-வ்ர
1	19	வி	பஞ் 49-55, உத்ரட் 40-30, தி 6-5.
2	20	வெ	ஷஷ் 46-34, ரேவ 38-38, தி 9-34.
3	21	ச	ஸப் 44-14, அசு 37-44, தி 27-53, ரத ஸப்தமி, வைவஸ்வதமனு.
4	22	ஞா	அஷ் 43-3, பர 37-57, தி 1-49.
5	23	தி	நவ 43-8, கார் 39-23, தி 8-40, ★
6	24	செ	தச 44-31, ரோ 42-5, தி 21-11, 56 59.
7	25	பு	ஏகா 47-9, மிரு 45-58, சேஷ 0-59, ஸர்வபீமைகா.
8	26	வி	துவா 50-51, திருவா 50-54, தி 8-42.
9	27	வெ	திர 55-30, புன 56-45, தி 23-49.
10	28	ச	சசி 60-0, பூச 60-0, தி 18-51.
11	29	ஞா	சசி 0-38, பூச 3-3, தி 38-29.
12	30	தி	○ 5-56, ஆயி 9-29, தி 42-33, மகர கிரு பிர திதி

தை மாத உத்ஸவங்கள்

ஜன	தை	
14	1	உத்தராயண புண்ய காலம், சங்கராந்தி, ஆண்டாள் நீரட்டம் சாற்றுமுறை.
15	2	காஞ்சீபுரம் சீவர உத்ஸவம்.
16	3	ஸ்ரீரங்கம் வேடுபரி. திருமழிசை ஆழ்வார் சாற்றுமுறை.
18	5	இராப்பத்து சாற்றுமுறை
19	6	இயற்பா சாற்றுமுறை கூரத்தாழ்வான் சாற்றுமுறை
20	7	திருப்பல்லாண்டு தொடக்கம் காஞ்சி அநுஷ்டானகுள உத்ஸவம்
25	12	திருநாங்கூர் 11 கருடசேவை திருவள்ளூர் கருடசேவை
28	15	காஞ்சி வனபோஜனம்
பிப்		
3	21	ரதசப்தமி
4	22	ஸ்ரீரங்கம் கருடசேவை
8	26	ஸ்ரீபெரும்புதூர் குருபுஷ்யம் ஆரம்பம்
9	27	எம்பார் சாற்றுமுறை
10	28	திருவல்லிக்கேணி தைப்பூசம் குருபுஷ்யம் சாற்றுமுறை
11	29	திருவல்லிக்கேணி ஈக்காட்டுத்தாங்கல் உத்ஸவம்
12	30	காஞ்சி அநந்தஸரஸ் தெப்பம்

ஆஸ்திகரே!

உங்கள் அன்பும் ஆதரவும் எங்களை திக்குமுக்காட வைக்கின்றன. முதல் மூன்று இதழ்கள் இப்போது ஒன்றுகூட எங்களிடம் இல்லை. இவ்வளவு வரவேற்பு இருக்குமென்று நாங்கள் நினைக்கவேயில்லை. புதிதாக சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு முதல் மூன்று இதழ்களைக் கொடுக்க இயலாதவர்களாக இருக்கிறோம். இந்த அளவுக்கு நீங்கள் எங்களுக்கு அளிக்கும் ஆதரவிற்கு சிரம் தாழ்த்தி எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். உங்களிடம் நாங்கள் வேண்டுவது ஒன்றே. அதாவது புதிதாக சந்தாதாரர்களாகச் சேரும் உங்கள் நண்பர்களுக்கு முதல் மூன்று இதழ்களை படிக்கத் தாருங்கள். அவர்கள் படித்தவுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்தவுதவி மட்டும் எங்களுக்குச் செய்தால் போதுமானது. அடுத்த இதழ்முதல் அதிகம் பிரதிகள் அச்சிடுவோம்.

திவ்யதேசத்தைப் பற்றிய குறிப்புகளும் அந்த திவ்யதேசத்து எம்பெருமானின் வண்ணப்படமும் உங்கள் கருத்தைக் கவர்வது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது நீங்களும் அவற்றை எழுதியனுப்பலாம். ஆழ்வார் பாடல் பெற்ற திவ்யதேசங்களைப் பற்றிய குறிப்புக்களை எழுதியனுப்புங்கள். அந்த திவ்ய தேசத்து எம்பெருமானின் புகைப்படம் இருந்தாலும் அனுப்புங்கள்· (வண்ணப்படமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை)

கேள்வி பதில் பகுதி விரைவில் ஆரம்பிக்கப்படும். நமது ஸம்ப்ரதாயம் பற்றிய சந்தேகங்களை, சரமாரியான கேள்விகளை உடனே எழுதியனுப்புங்கள்.

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.



ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீ பெரும்பூதூர் யதீந்த்ரப்ரவண யதிராஜ ஜீயர் ஸ்வாமி கீதாசார்யன் ஆயுள் சந்தாவாக ரூ. 100 வழங்கியுள்ளார். அவருக்கு எமது உளம்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேம்.

— ஆசிரியர்.